தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60 மலர் : 2

உள்ளுறை

1. கல்வெட்டுகள்தரும் கோயில் நிவந்தங்களும்
ஆட்சி முறைகளும் 49

பேராசிரியர் சி. கோவிந்த ராசனார்,
ஆராய்ச்சியாளர், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

2. கூற்றம் உதைக்கும் குறி 60

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
டாக்டர் மோ. அ. துரை அரங்கனார்

3. தமிழில் பெயரடைகள் 63

வி. ரேணுகாதேவி,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்;

4. தமிழகத்திற் கதாகாலட்சேபம் 68

இரா. குருநாதன், எம். ஏ., எம்ஃபில்,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சை.

5. தொல்காப்பியம் செய்யுளியல்
காண்டிகையுரை 81

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

கரந்தைப் புலவர் கல்லூரி

கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

(கரந்தைத் தமிழ்ச்சங்கம்)

"தமிழ் எம். பில். (முழுநேரம்) பட்டப்படிப்பு, தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு (எம் ஏ.) பி. லிட் பட்டப் படிப்பு மாணவ, மாணவியர்

சேர்க்கை அறிவிப்பு

கரந்தைப் புலவர் கல்லூரி கோடைவிடுமுறைக்குப்பின் 30—6—1986 இல் திறக்கப்பெறும். இக் கல்லூரியில் தமிழ் எம். பில். (முழு நேரம்) பட்டப் படிப்பிற்கும் வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

தமிழ் முதுகலை வகுப்பில் சேர விரும்புவோர் பி. லிட். / பி எஃசி / பி. ஏ. பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

பி. லிட். பட்டப்படிப்பில் சேர விரும்புவோர் பன்னிரண்டாம் வகுப்பு (+2) அல்லது புகுமுக வகுப்பு (பி.யூ சி.) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மாணவர்க்கும், மாணவியர்க்கும் தனித்தனியே உணவு விடுதிகள் உள்ளன.

அரசினர் விதிமுறைகளுக்கிணங்கப் படிப்புதவித் தொகையும், கல்விக்கட்டணச் சலுகையும் கிடைக்க ஆவன செய்யப் பெறும்.

பி. லிட். விண்ணப்பக்கட்டணம் ரூ. 5/- முதுகலை பட்டப் படிப்பு விண்ணப்பக் கட்டணம் ரூ 10/- அஞ்சல் கட்டணம் ரூ. 1/-

கல்லூரி மாணவ, மாணவியர் இப்போது சேர்க்கப்பட்டு வருகின்றனர். ஆதலின், கல்லூரியில் தமிழ் எம். ஏ. பட்டப் படிப்பு வகுப்பிலும் பி. லிட். பட்டப்படிப்பு வகுப்பிலும் சேர விரும்பும் மாணவ, மாணவியர் தம் கல்விச் சான்றிதழ்களுடனும், உரிய கல்லூரிக் கட்டணத்துடனும் உடனே கல்லூரி முதல்வரை நேரில் காணுமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

இங்ஙனம்

பேராசிரியர்
பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சாவூர் – 2.

த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 60 அட்சய — வைகாசி மலர்: 2

மே — ஜூன் 1986

கல்வெட்டுகள் தரும் கோயில் நிவந்தங்களும் ஆட்சி முறைகளும்

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்,
ஆராய்ச்சியாளர், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

'கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது தொன்றுதொட்டுத் தமிழகம் வழங்கும் பழமொழியாகும்.

சங்ககாலத் தமிழகத்தில் சிவன், திருமால், இந்திரன், கொற்றவை, முருகன் ஆகிய தெய்வங்கட்கும் புத்தர், மகாவீரர் போன்ற சமய முதல்வர்கட்கும் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்ததனை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மக்களின் தெய்வ உணர்வுக்கேற்பவும், சமயங்களின் சார்பிலும், வீரவழிபாட்டு நெறியிலும் காலவளர்ச்சியுடன் கோயில்களும் தெய்வங்களும் பெருகி வளர்ச்சி பெற்றுள்ளன.

தெய்வநலந்திகழும் திருக்கோயில்கள் பல்லவர் பாண்டியர், சோழர், கொங்குக் குறுநில மன்னர்கள் ஆகிய அரசர்களின் ஆட்சிக்காலங்களில் எத்தகைய அற நிவந்தங்களும் ஆட்சி முறைகளும் பெற்றிருந்தன என்பதனைக் கல்வெட்டுகள் தரும் செய்திகளைக் கொண்டு கூறுவதே இத்தொகுப்புரையாகும்.

தெய்வ உருவங்கள்

தெய்வங்களைப் போற்றுமுகத்தான் மரத்திலும், கல்லிலும் உருவாக்கி வைத்த தத்துவ தெய்வ வடிவங்கள் 'திருமேனிகள்' என்று குறிக்கப்பட்டன. மனிதராகப் பிறந்து தெய்வத் தன்மையுடன் விளங்கிய சான்றோர்கட்கு, அவரவர் உருவில் அமைக்கப்பட்ட வடிவங்கள் 'படிமங்கள்' என்று கூறப்பெற்றன. இப்பெயர், வடமொழியில் 'பிரதிமம்' என்று சொல்லப் பெறுகின்றது.

> "உடையார் ஸ்ரீராஜராஜேஸ்வரமுடையார்க்கு
> ஸ்ரீகார்யஞ் செய்கின்ற பொய்கைநாடு
> கிழவன் ஆதித்தன் சூரியனான தென்
> னவன் மூவேந்தவேளான் — செய்வித்த
> செப்புத்திருமேனிகளும் ப்ரதிமங்களும்"

உமாபரமேஸ்வரர் - திருமேனி. சிறுத்தொண்டநம்பி - படிமம்
(தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு)

கோயில்கள்

சங்ககாலத்தில் செங்கல் சுண்ணாம்பு ஆகியவற்றால் எழுதப்பட்ட சிறுகோயில்களாகவே தமிழகமெங்கும் இருந்துள்ளன. இத்தகைய கோயில்கள் பெரும்பான்மையும் ஆற்றங்கரைப்பகுதிகளிலேயே அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட செங்கற் கோயில்கள் ஆற்றுப்பெருக்கழிவுக்கு இலக்காகாமல், சோழன் கோச்செங்கணான் அடித்தளம்

உயர்ந்த மேடையாக இருக்குமாறு கோயில்களைக் கட்டச் செய்துளான். இவ்வாறமைந்த கோயில் 'பெருங்கோயில்' எனப் பெயர் பெற்றிருந்தது. அவ்வவற்றின் கட்டட அமைப்பிற்கேற்ப, இளங்கோயில், கொகுடிக்கோயில், கரக் கோயில், ஆலக்கோயில் என்ற பெயர்களுடன் திருக்கோயில்கள் பல இருந்ததனை அப்பரடிகள் தமது திருத்தாண்டகத்தால் புலப்படுத்துகின்றார்.

இத்தகைய செங்கற் கோயில்கள் காலத்தாலும் வெள்ளத் தாலும் அழிந்து நின்ற நிலையில், கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதலாக அரசு செலுத்திய பல்லவ மன்னர்களும், பின் தொடர்ந்த பாண்டிய சோழ மன்னர்களும் கருங்கல் திருப் பணியாகக் கட்டியதுடன் புதிபல கற்றளிகளையும் எழுப்பினர்.

காஞ்சியில் இராஜசிம்மபல்லவன் கட்டிய கைலாசநாதர் கற்றளியும், தஞ்சையில் முதல் இராசராசன் எழுப்பிய இராஜராஜேஸ்வரமும் தென்காசியில் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கட்டிய விசுவநாதர் கோயிலும், திருவக்கரையில் செம்பியன் மாதேவி எடுப்பித்த கற்றளி சிவலோகமும் குறிப்பிடத்தக்கனவாகும்.

தெய்வப் பணியாளர்களும் - வழிபாட்டு முறைகளும்

சிவன் கோயில்களின் இறையகத்தில் நாளும் திருவிளக்கு ஏற்றுதல், திருமேனிக்குத் திருமுழுக்குச் செய்வித்தல், திருவமுது படைத்தல் ஆகிய தெய்வப்பணியினைச் செய்வதற் குரியவராகத் தொன்று தொட்டு அமைக்கப்பட்டவர்கள் ஆதிசைவர்கள் என்னும் மரபுவழிவந்தவராவர். இவர்கள், 'திருமேனி தீண்டுவார்கள்', 'குடமும் அலகுங்கொண்டு கோயில் புகுவார்' திருவாராதனை நம்பிகள், பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள் என்றெல்லாம் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

இவர்கள் கோயில் வழிபாட்டிற்குரிய முறைகளைக் குறிக்கும் ஆகமநூல்களை நன்கு அறிந்திருப்பர். சிவாகமங்கள் — காமிகம், மகுடம், யோகஜம், சிந்தியம், காரணம, விஜயம் முதலாக இருபெத்தெட்டு வகை ஆகம நூல்களாகும் இவற்றின் விரிவு - 198 ஆகும்.

சிவாச்சாரியர் தாம் மேற்கொண்டுள்ள கோயில் மூர்த்தங்கட்கு ஆதியிலமைந்த ஆகம நெறிப்படியே வழிபாடு செய்வர். இவர்கள் மூலத்தானப் பணியுடையாராதலின் இவர்களை 'அகநாழிகையார்', 'உண்ணாழிகையார்' என்றெல்லாம் கல்வெட்டுச் செய்திகள் குறிக்கின்றன.

வைணவ ஆகமங்கள் (1) வைகானசம் (2) பாஞ்சராத்திரம் என்று இருவகைப்படும். இவற்றைப் பின்பற்றிய முறையில், திருமாலுக்கும் திருமால் மூர்த்தங்கட்கும் நாளும் வழிபாடு செய்யும் பணியாளர், நம்பிகள், பட்டர்கள், அர்ச்சகர் என்னும் திருநாமங்களைப் பெறுவர்.

இவர்கட்கு அகநாழிகையிலிருந்து ஏவின செய்தலும்' திருவாராதனைக்கு ஆவன உதவுவதும் செய்பவர் திருப்பரிசாரகர் என்றும் 'மாணிகள்' என்றும் அழைக்கப்பெறுவர். மடைப்பள்ளியில் தூய்மையுடன் திருவமுது அட்டித்துத் தருபவர் 'மடையாள்' என்று குறிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறாக, அகநாழிகையெனும் கருவறைப்பணிகளைச் செய்தவர்கள், 'ஆதி சண்டேசுவர தேவகன்மிகள்' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நாளும் முறைப்படி செயலாற்றுகின்றனரா என்பதனைக் கண்காணிக்க, அனுபவமும் நற்பெயரும் பெற்றாரொருவர் நியமிக்கப் பெற்றிருப்பர். இவர் 'ஆதி சண்டேசுவர தேவகன்மி கண்காணி' என்று பெயர் பெறுவர். இவ்வாறாக, கோயில் வழிபாட்டு நியதிகட்கமைந்த குழுவினர் 'தேவகண்காணி கரணத்தார்கள்' ஸ்ரீமஹேஸ்வரக் கண்காணிசெய்வார்கள்' என்ற பெயர்களுடன் இருந்துள்ளனர்.

கோயில் ஸ்ரீபண்டாரம்

மன்னரும் செல்வரும் கட்டிய கோயில்கட்கு நாளும் திருவிளக்கிடுதல், வழிபாடு செய்கல், நிவேதனம் அமைத்தல், பள்ளித்தாமம் எனும் மலர்மாலை தொடுத்தல், திருவிழாக்கள் நிகழ்வித்தல் ஆகியவற்றிற்கமைந்த செலவினங்கட்குரிய வருவாய் உடையதாக, பொற்காசுகளையும் நிலபுலன்களையும் நிவந்தப்படுத்தி இருந்தனர். இவ்வாறான அறப்பொருள்களையும் நிலவருவாய்களையும் மக்கள் நல்கும் அறநிவந்தங்களையும் ஏற்றுக் காத்து, செலவு செய்து, பிழையில்லாமல் கணக்கிட்டு வைக்கும் கோயிற்பகுதி, 'பண்டாரம், ஸ்ரீபண்டாரம்

என்றெலாம் பெயர் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இப்பண்டாரங்கள் அவ்வக்கோயிலுக்குரிய இறைவனின் பெயராலேயே குறிக்கப்பட்டன.

முதல் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோயில் மூலபண்டாரம் 'இராசராசேச்சரமுடையார் ஸ்ரீ பண்டாரம்' என்று பெயர் பெற்றிருந்தது. பண்டாரக் காப்பாளர் 'பண்டாரி' என்றழைக்கப்பட்டார். இப்பண்டாரிகள் அரசனாலும் ஊர்ச்சபையாராலும் தேர்ந்தெடுக்கப்பெற்றவராக, ஓராண்டு கால அளவே பணி செய்தற்குரியவராக, இருந்துள்ளனர். பண்டாரிகட்குக் கீழ், கணக்கெழுதுவான், கீழ்க்கணக்கு என்ற இரு அலுவலர்கள் இருந்துள்ளனர். இவர்கட்கு ஆண்டொன்றிற்கு குறிப்பிட்ட அளவு ஊதியம் நெல்லாகவே கோயில் பண்டாரத்திலிருந்து கொடுக்கப் பெற்றது.

நிவந்தங்கள்

தேவதானம் :

சிவன் கோயில்கட்கு அளிக்கப்பட்ட இறையிலி நில புலன்கள், பொற்காசு நிவந்தங்கள் 'தேவதானம்' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டன. கணபதி, முருகன் ஆகிய கோயில்கட்கும் தேவதான அறநிவந்தங்கள் பொருந்தியதாக வழங்கப்பட்டுளது.

"கோராஜராஜகேஸரி வந்மற்கு யாண்டு —19 ஆவது
ஸ்ரீ கண்டராதித்த தேவர் நம்பிராட்டியார்
ஸ்ரீ உத்தமசோழரைத் திருவயிறு வாய்த்த
உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார்
எடுப்பித்தருளின ஸ்ரீ திருவக்கரை திருக்கற்றளி
சிவலோகம் உடைய பரமஸ்வாமிகளுக்கு
தேவதானமாகச் செய்த ஊர் - மணலி"

(திருவக்கரை - கல்வெட்டு)

திருவிடையாட்டம் :

திருமால் கோயில்கட்கும் வைணவச் சார்புடைய பிற தெய்வங்கட்கும் உரிய நித்த, நிவத்த வருவாய் உடையதாக அளிக்கப்படும் நிலபுலன்கள் 'திருவிடையாட்டம்' என்ற பெயரால் குறிக்கப்பட்டன.

பல்லவர் காலத்தில் சைவ, வைணவக்கோயில்கட்கு அளிக்கப்பட்ட நிலங்கள் பொதுவாகவே தேவதானங்கள் என்று கூறப்பெற்றிருப்பதுடன், 'சிவனும் திருமாலும்' பரமஸ்வாமி' என்ற பொதுப்பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பள்ளிச்சந்தம் :

சைவ, பௌத்த கோயில்கட்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள், ஊர்கள், பள்ளிச்சந்தம்' என்ற பொதுப்பெயரால் குறிக்கப்பட்டன.

முதல் இராசராசன், நாகப்பட்டினத்தில் எழுப்பப்பட்ட பௌத்த விகாரத்திற்கு ஆனைமங்கலம் என்ற கிராமத்தைப் பள்ளிச் சந்தமாக இறையிலி செய்துள்ளதனைச் செப்பேட்டுச் சாசனம் உணர்த்துகின்றது.

"நாகப்பட்டனக் கூற்றத்து நாகப்பட்டினத்து
எடுப்பிக்கின்ற சூளாமணிபந்ம விகாரத்துப்
பள்ளிக்கு வேண்டும் நிவந்தங்கட்கு-பள்ளிச்
சந்தமாக இறையிலி வாயிலிட்டுக் குடுக்க
வென்று நாம் சொல்ல"
-(முதல் இராசராசன்-ஆனைமலங்கச் செப்பேடுகள்)

"ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பங்கள
நாட்டு நடுவில் வகைமுகைநாட்டு பள்ளிச்
சந்தம் வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை
ஜிநாலயத்துத் தேவர்க்கு'' (முதல் இராசேந்திரன்-
திருமலை கல்வெட்டு)

திருநாமத்துக்காணி :

கோயில்கட்குரிய இறைவன் பெயராலும், கோயிலுக்குரிய முதன்மை அதிகாரியாகக் கருதப்பெறும் சண்டேசுவரர் பெயராலும் செய்யப்பெறும் அறநிவந்தங்கள் இறையிலி நிலங்கள்'திருநாமத்துக்காணி' என்று பெயர்பெறும்.

அர்ச்சனாபோகம் :

திருக்கோயில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குச் சிறப்பாக அர்ச்சனை பெருந்திருவமுது, திருவிழா ஆகியவற்றைச் செய்பவிரும்புவார் அவ்வறச்செயலைத் தாம் விரும்பிய நன்னாளிலோ பிறவாறோ நிகழும்பொருட்டுத் திட்டஞ்செய்து

அதற்கமைந்த மூலவருவாயுடையதாக நிலங்களை நிவந்தமாக அமைத்துக், அதனை கோயில் நிர்வாகத்தின் பொறுப்பிலோ சிவபிராமணரின் பொறுப்பிலோ அமைத்துக் கல்வெட்டாகவும் அவ்வறச் செயலைப் பொறித்து வைப்பர். இத்தகைய நிவந்தம் 'அர்ச்சனாபோகம்' என்று பெயர்பெறும்.

நிருத்தபோகம்

கோயில்களில் விழா நாட்களில் சிறப்பு நிகழ்ச்சிகளாக நாடகம், கூத்து ஆகியவை நிகழ்த்தப்பட்டிருந்தன. ஆரியர் ஆடிய கூத்து ஆரியக் கூத்தென்றும், சாக்கை யென்ற மரபுவழிக் கூத்தாடியது சாக்கைக் கூத்தென்றும் பெயர் பெற்றன. தஞ்சைப் பெரியகோயிலில் இராசராசன் பெயரால் நாடகம் நிகழ்த்தப்பெற்றதைக் கல்வெட்டுச் செய்தியொன்று புலப்படுத்துகின்றது. நாடகவுறுப்பினர்க்கும் நாடகத்தை நிகழ்த்துவிக்கும் நாடகமராயனுக்கும் கூத்தர்கட்கும் நாட் பேரகமாகவும் இறையிலி காணியாகவும் போகங்கள் வழங்கப் பட்டன.

நாளும் வழிபாட்டுச் சந்திகளின்போது, தெய்வப் பாடல் களுக்கு ஏற்ப ஆடல் செய்வதற்கு ஆடல்மகளிர் அமைக்கத் பட்டிருந்தனர். அம்மகளிரைக் குடியேற்றியபகுதி 'தளிச்சேரி' என்று பெயர் பெற்றதுடன், அம்மகளிர் 'தளிச்சேரிப் பெண்டு கள்' என்றழைக்கப்பட்டனர். இவர்கட்கு நெல்லும் நிலமு மாகப் போகங்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறு, ஆடல், கூத்து, நாடகம் ஆகியவை நிகழ்த்திய கலைஞர்கட்கு அளிக்கப்பட்ட இறையிலி 'நிருத்தபோகம்' என்று பெயர் பெற்றது.

இவ்வாறே, கோயிலில் நாள்தோறும் தேவாரப் பதியங் களை விண்ணப்பம் செய்ய இட்ட பிடாரர்கள் என்னும் ஓதுவார்களுக்கு நித்த நிவந்தமாக அளிக்கப்பட்டது. 'திருப்பதிய நிவந்தம்' என்று பெயர்பெற்றது.

பட்டியும் பாத்தியும்

சிவன்கோயில்களில் கருவறை வடபுறச் சுவர் புரையில் அமைக்கப்பெறும் தெய்வம் கொற்றவையாகும். இத் தெய்வத்தினைத் துர்க்கை, மகிடாசுரமர்த்தனி என்ற பெயர் களாலும் வழிபடுவர். இத்தெய்வத்திற்குத் தனிக் கோயிலமைத்தும் வழிபட்டுள்ளனர். இத் தெய்வத்திற்கும்,

கிராம காவல் தெய்வமாகிய பிடாரிக்கும் உரிய நித்த நிவந்தச் செலவினங்களுக்குரியதாக அளிக்கப்பெறும் நிலங்கள் முறையே 'துர்க்கைப்பட்டி' 'பிடாரிப்பட்டி' என்று பெயர் பெற்றுள்ளன. கிராமத்தின் தலைமைத் தெய்வமாகும் ஐயனார்க்கு அளிக்கப் பட்ட நிலன் 'ஐயன்பாத்தி' என்று பெயர் பெற்றுளது.

வைத்திய போகம் :

கோயிலின் திருச்சுற்றிடத்தில் கோயிலின் நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த ஆதுலர்சாலைக்கும் மருத்துவர்க்கும் மூலிகைகள் வளர்ப்பதற்கும் வழங்கப்பட்டிருந்த நிலம் வைத்தியபோகம்' என்ற பெயரால் வழங்கப்பட்டிருந்தன. இந் நிவந்தத்தினை 'விஷவிருத்தி' என்றும் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன.

தஞ்சை மாட்டத்திலுள்ள செப்பியன் மாதேவி என்ற ஊரில் செப்பியன் மாதேவியரால் கட்டப்பட்ட கற்றளியில் செப்பியன் மாதேவியாரிட்ட நிவந்தப்படி ஆதுலர் சாலை யொன்று அவர் பெயராலேயே நிகழ்ந்துள்ளதனைக் கல்வெட்டுச் செய்திகள் அறிவிக்கின்றன.

சிதம்பரம் மேலைப் பெருவீதியில் விக்கிரமசோழன் பெயரால் ஒரு வைத்தியசாலை இருந்துள்ளதனைக் கோயில் கல்வெட்டொன்று குறிக்கிறது.

சீவிதம், காணியாட்சி, மானியம்

கோயில்கட்குரிய தெய்வப்பணிகளுடன், கோயிலைத் தூய்மை செய்யும் பணி தீவர்த்திப் பணி, பள்ளித்தாமம் தொடுக்கும் பணி, உருவாய்களை நேரில் கண்டு முதல் செய்து வரும் காரளவுப்பணி, ஆகியவற்றிற்கு அந்நாளில் நாள் ஊதியமோ, மாத ஊதியமோ, அளிக்கப் பெறவில்லை. அவர்களது பணித்தகுதிக்கேற்ப வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பதுடன், வழிவழியாகப் பணிசெய்து அனுபவிப்பதற்கும் ஏற்புடையதாக, கோயிலுக்குரிய நிலங்களில் இறையிலி காணிகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு அளிக்கப்பெற்றவை சீவிதம் என்றும் காணியாட்சி என்றும் பெயர் பெற்றிருந்தன. இம்முறையிலேயே அர்ச்சகர்களாகிய சிவபிராமணர்களும் பட்டர்களும் சீவித காணியாட்சி இறையிலி நிலங்கள் பெற்றிருந்தனர். பிற் காலத்தில் சீவிதம் 'மானியம்' என்ற பெயரால் வழங்கப் பட்டுள்ளது.

மற்றும், கோயில் பகுதிகளைப் பழுதுபார்ப்பார், பல்லக்குச் சுமப்பார், குசக்கலம் இடுவார், திருமஞ்சனம் கொணர்வார், நெல்குறுக்கூலிப் பெறுவார், தட்டார் ஆகிய கோயில் ஊழியர் கட்கு அளிக்கப்பட்ட சீவிதங்கள், போகம் விருத்தி, காணிபேறு, புறம், பற்று என்ற பெயர்களால் குறிக்கப்பட்டன.

இவ்வாறாகத் திருக்கோயில்கட்கமைந்த அற நிவந்தப் பொருள்களையும் செலவினங்களையும், தெய்வப்பணிகளையும் அக்காலப் பெருமக்களும், கிராமசபையார்களும், அதிகாரிகளும் எம்முறையில் ஆட்சி செய்துள்ளனர் என்பதனைப் பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கோயில் ஆட்சிமுறை

பன்மாஹேஸ்வரர் :

தமிழகத்தில் கி. பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளில், பல்லவர் ஆட்சிக்காலத்தில் கோயில் நிர்வாகத்தினைக் கண்காணிப்பதற்கு நாட்டில் தெய்வபக்தியும், ஒழுக்கமும், கல்வியும், அனுபவமும், வயதும் நிறைந்த அந்தணப் பெருமக்கள், நகரத்தார்கள், வேளாண் பெருமக்கள் ஆகியோரமைந்த பெருங்குழுவொன்று நாட்டவராலும் அரசர்களாலும் மதிக்கப்பட்ட நிலையில் இயங்கியுளது. அக் குழுவின் உறுப்பினர் தொகை 48000 என்று கல்வெட்டுகள் அறிமுகம் செய்கின்றன. இக்குழுவினர் ஊதியமின்றிக் கோயில்களைக் கண்காணித்துள்ளனர். இச்சிறப்பினாலேயே, கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தேவதான நிவந்தங்கள் பிற நிவந்தங்கள் கூறும் கல்வெட்டுக்களில் நிறைவாக, "இத்தன்மம் பன்மாஹேஸ்வரர் ரக்ஷை"-என்று காப்புரை கூறப்பட்டுள்ளது.

கிராமகாரியம் திருத்துகின்ற பெருமக்கள் :

பல்லவ பாண்டிய சோழர் ஆட்சிக்காலங்களில் ஊர்கள் தோறும் முடியாட்சியில் குடியாட்சி நிலவியுள்ளது. குடியாட்சிக் கமைந்த நிருவாகக்குழு, ஊர்ப்பெருமக்களாலும், குடவோலை முறையாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. இக்குழுவே கிராமசபை, ஊர்ச்சபை என்ற பெயர்களால் குறிக்கப்பட்டது. இச்சபையினரே முதற்கண் ஊரிலுள்ள கோயில்களின் ஆட்சியினைச் செய்துள்ளனர். காலவளர்ச்சியில் கிராமசபைகளின் செயல்கள் மிகப் பலவாக உட்பிரிவுகளாக வாரியங்கள் (Department)

பல அமைக்கப்பட்டுச் செயல்பட்டுள்ளன. வாரியங்களுள் தலைமையான வாரியம் சம்வத்சரவாரியம் என்பதாகும். இவ்வாரியப் பெருமக்கள் கோயில் நிருவாகத்தினை ஏற்று நடத்தியதுடன் கிராமகாரியம் திருத்துகின்ற பெருமக்களாக வும் இருந்துள்ளனர்.

ஸ்ரீ காரியம்

பெருங்கோயில்கள் அரசர்களால் அமைக்கப்பட்டு நடை முறைகள் மிகுதிப் பெறவும், அவற்றிற்கமைந்த வருவாயாக, ஊர்களும், நிலங்களும், பொற்காசுகளும் பெருமளவில் அற நிவந்தமாகச் செய்யப்பெற்றிருந்தன. எனவே, நாட்டில் வழக்கிலிருந்த பன்மாஹேஸ்வரர், வாரியத்தார் ஆகியோரின் சார்பில் தனது கண்காணிக்க அதிகாரி ஒருவர் அரசனால் அமைக்கப்பட்டிருந்தார். அவ்வதிகாரம் தெய்வநற்பணி யாதலின் 'ஸ்ரீகாரியம்' என்று பெயர் சுட்டப்பட்டது.

ஸ்ரீகாரியம் செய்வார், கல்வி, பக்தி, ஒழுக்கம், சான்றாண்மை ஆகிய நற்பண்புகள் உடையாராக இருந்துள்ளமையினைத் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

இவர்கள், கோயில் வருவாய்கள், அறநிவந்தங்கள், நாள் வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், திருவிளக்கு நிவந்தங்கள் கோயில் நிலபுலன்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து வருவதுடன், ஸ்ரீபண்டார வரவுசெலவுகளையும் மேற்பார்வை யிடுவர்.

ஸ்ரீகாரியம் பொறுப்புள்ள நிர்வாக அதிகாரியாக இருப்பினும் அவருடைய செயலினை மேல் அதிகாரமுடன் கண்காணிக்கும் அதிகாரிகள் அரசனால் அமைக்கப் பட்டிருந்தனர். அப்பதவி 'ஸ்ரீகாரியக்கண்காணி' என்று பெயர் பெறும். இவற்றிற்கெல்லாம் மேலாக நாட்டிலுள்ள கோயில் களின் நடைமுறைகள், பண்டாரங்களின் கணக்கு வகைகள், ஸ்ரீகாரியங்கள், ஸ்ரீகாரியக்கண்காணிகள் ஆகிய நிர்வாகங்களை விரும்பியபோது தணிக்கை செய்யவும், குற்றங்குறை காணின் நீக்கவும் தண்டனையளிக்கவும் அதிகாரம் பெற்றிருந்த பதவி யாளர்கள் 'ஸ்ரீகாரியக்கண்காணிநாயகம்' என்ற பெயரினைப் பெற்றிருந்தனர். இவர்கள் ஊர்ச்சபையாருடன் கூடியே தண்டனை அளிக்கும் செயலுடையாராக இருந்துள்ளனர்.

முதல் இராசராசன் ஆட்சியில் தஞ்சைப் பெரியகோயிலில் ஸ்ரீகாரியம் செய்தவர் 'பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான்' என்ற அரசியலனுபவம் மிக்க சான்றோராவர். ஸ்ரீகாரியம் செய்யும் அதிகாரிகள் எத்தகைய சீலமும் அறநோக்கும் பக்தியும் உடையாராக இருந்துள்ளார்கள் என்பதனை இவரது கல்வெட்டொன்றினால் அறியலாகும்.

கல்வெட்டு

"ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிவர்மரான ஸ்ரீராஜேந்திர
சோழதேவர்க்கு யாண்டு மூன்றாவது, உடையார்
ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்கு ஸ்ரீகார்யஞ் செய்
கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரிய
னான தென்னவன் மூவேந்தவேளான் யாண்டு
மூன்றாவது வரை செய்வித்த செப்புப்பிரதிமங்கள்
உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும்
ரத்தனங்கள் தக்ஷிணமேருவிடங்கன் என்னும்
கல்லால் நிறை எடுத்தும் கல்லில் வெட்டின".

(தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு)

இவ்வாறாகத் தமிழக வரலாற்றில் திருக்கோயில்களும், அவற்றிற்கமைந்த பல்வேறுபட்ட தெய்வப்பணிகளும், அவ்வவற்றிற்கமைக்கப்பட்ட அறநிவந்தங்களும், ஆட்சிமுறைகளும் கல்வெட்டுகள் தரும் செய்திகளில் சுருக்கமாகக் குறிக்கப் பெறுவது கொண்டும் அறியலாகும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கூற்றம் உதைக்கும் குறி

டாக்டர் மொ. அ. துரை அரங்கனார்

வினைப்பயன், உள்ளத்தில் பதிந்து கிடப்பது. அது செயற்படும்போது உள்ளம் எண்ண அலைகளாக வெளிப்படும். மறப்பும் நினைப்புமாய் வெளிப்பட்டும் உள்ளத்தின் எண்ண அலைகளே மனம் எனப்படும். எண்ணங்களாக உள்ளத்தில் பதிந்து கிடக்கும் பதிவுகளே வாசனைகள் எனப்படும். எண்ண அலைகளாக மனம் வெளிப்படுவதற்குத் தனித்துணையாக நிற்பது பிராணன் இரண்டு மூக்குத்துளைகள் வழியாக இந்தப் பிராணன் வளிக்கால்களாக இரண்டாகப் பிரிந்து வெளியே செல்வதும் உள்ளே வருவதுமாக இடைவிடாமல் செயலாற்றிக் கொண்டிருக்கும். எருவாய் (குதம்) கருவாய் (குய்யம்) என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட இடத்திலிருந்து ஏறியும் இறங்கியும் இரண்டு கால்களாக இப் பிராணன் மூக்குத் துளைகள் வழியாக இயங்கி நாசமாகும். இந்தக் கால்கள் வழியாக எண்ண அலைகள் வடிவமான மனம் நிலைபெறாது இயங்கி வினைப்பயனைத் துய்ப்பதும், புதுவினைகளை ஈட்டுவதுமாகிய செயலைச் செய்துகொண்டேயிருக்கும். இரு கால்களாக வேறுபட்டு ஏறியும் இறங்கியும் செயற்படும் பிராணன் எனப்படும் உயிர்வளியாகிய காற்றைப் பிடித்துக் கட்டிவிட்டால், பின் எண்ண அலைகள் வெளிப்படாமல் அக் காற்றில் மடங்கி அடங்கி வறண்டுபோம். பிறகு கூற்றுவனுக்கு வேலையில்லை. இறப்புப் பிறப்பில்லை, என்றும் இன்பமாக நிலைபெறலாம்.

ஈருருளி எனப்படும் சைக்கிள் சக்கரத்தைச் சுற்றியிருக்கும் ரப்பர்க்குழாயை நடுவில் அறுத்துவிட்டு அதற்குள் காற்றடிப்பானால் (Pump) காற்றை ஏற்ற முயன்றால் அக் காற்று அக் குழாய்க்குள் நிலை பெறாது இரண்டு முனைகள் வழியே வெளியே சென்று நாசமாகும் என்று நாம் கூறவும் வேண்டுமா ? இரண்டு முனைகளும் ஒன்று சேருமாறு பசை யால் ஒட்டிவிட்டுப் பின் காற்றை உட்செலுத்தினால் அக் காற்று வெளியே சென்று நாசமாகாது. குழாயின் உள்ளேயே நிலைபெற்று நிறைந்து பின் சைகிள் இயங்குவதற்கு ஆற்றலை யும் தந்து நிற்கும். அதுபோலவே, எருவாய் கருவாய்களுக்கு இடைப்பட்ட இடத்திலிருந்து இரண்டு கால்களாக (பிரிவு களாக)ப் புருவ நடுவிடத்தில் தொடங்கும் மூக்குத் துளைகள்

வழியாக அறுபட்டு வெளியே உயிர்வளி என்னும் பிராணன் சென்று நாசமாகிக்கொண்டிருக்கும் வரையில், மனத்தை அடக்கி இன்பமாக நிலைபெறும் ஆற்றல் உயிருக்கு உண்டாவதில்லை. புருவ நடுவிடத்தில் இந்த இரண்டு கால்களையும் ஒட்டவைத்து (இணைத்து) விட்டால், பின் அக்காற்று வெளியே செல்லாமல் உள்ளேயே இயங்கத் தலைப்படும். இவ்வாறு இணைத்து உட்புறத்திலேயே இயங்க வைக்கும் வழியே காற்றைப் பிடிக்கும் வழியாகும்; எண்ண அலைகளை வறுக்கும் வழியாகும்; கூற்றையுதைக்கும் வழியாகும்.

தானாக ஏறியும் இறங்கியும் புருவ நடுவிடத்தினின்றும் மூக்குத்துளைகள் வழியாக வெளியேறி நாசமாகும் காற்றை அவ்வாறு தானாக ஏறவும் இறங்கவும் விடாமல், நாமாக ஏற்றி இறக்கி இரண்டு கால்களையும் இணைத்துவிடுவோமாயின் பிறகு அது வெளியே சென்று நாசமாகாது உள்ளே நிறைந்து இயங்கி உயிருக்கு ஆற்றல் தருவதாகும். இவ்வாற்றலால் பெறும் சிறந்த பேறு எண்ண அலைகள் வறுபடுதல் வாயிலாக மனம் அடங்கி ஒடுங்கப் பெறுவதாகும். அம்மட்டோ? எண்ணற்ற பேறுகள் அவ்வாற்றலால் ஏற்படும்.

காற்றைப் பிடிப்பது என்பது எளியதொரு செயலாகும்; விளையாட்டாக அதை நாம் செய்யலாம். துருத்தி போல் ஊதும் மூச்சைச் சுகமுடன் அடக்கலாம் என்றும், அவ்வாறு அடக்கினால் எண்ண அலைகள் அடங்கி ஒடுங்கும் என்றும் தாண்டவராய சுவாமிகள் தாம் இயற்றிய கைவல்ய நவநீதம் என்ற நூலில் கூறுயிருப்பது ஈண்டு நினைவு கூர்தற்கு உரியதாகும்.

"மதயானையை அடக்கி நம் வசமாய் நடத்தலாம். கரடி புலி இவற்றின் வாயையும் கட்டலாம் ஒரு சிங்கத்தை முதுகின் மேல் கொள்ளலாம். பாம்பை எடுத்தாட்டலாம். இரசவாத வித்தையால் ஐத்து லோகத்தையும் பொன்னாக்கி விற்றுண்ணலாம் வேறொருவர் காணாமல் உலகத்தில் உலாவலாம். விண்ணவர்களை ஏவல் கொள்ளலாம். எப்போதும் இளமையோடு இருக்கலாம் மற்றொரு சரீரத்திலும் புகுதலாம். நீர் மேல் நடக்கலாம். தீ மேல் இருக்கலாம். ஒப்புயர்வில்லாத சித்திகளையெல்லாம் பெறலாம். ஆனால், சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் அரிது, அரிது", என்று தாயுமானவர் கூறியுள்ளது ஈண்டுக் கருதுதற்குரியது.

"மனமென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே—முத்தி
வாய்த்ததென்று எண்ணிக் கோடா தாண்டவக்கோனே"
என்று வரும் சித்தர் பாடலும் ஈண்டுக் கருதுதற்கு உரியது.

எனவே மனம் அடங்குதலே வீடு பெறுதற்கு உரிய வழியாகும்; பிறப்பறுக்கும் நெறியாகும்.

இம்மனம் அடங்கப் பிராணன் அடங்க வேண்டும்;
"பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராணன் இருக்கில் பிறப்பிறப் பில்லை"
என்பது திருமூலர் திருமந்திரம்.

பிராணன் அடங்குதல் வாயிலாகத்தான் மனம் அடங்கும் எனவே பிராணனை அடக்கும் வழியே பெறுதற்கரிய பெரு வழியாகும். பெரு வழி என்பதனால் அரு வழியெனற்கில்லை; எளிய வழியேயாம். கூற்றையுதைக்கும் குறி என இவ் வழியைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் உணர்த்தியிருப்பது ஈண்டு நினைவு கூர்தற்கு உரியது.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது ஆமே. (571)

ஏற்றியும் இறக்கியும் இரண்டு கால்களாகப் பிரிந்து சென்று நாசமாகும் உள்வளியையும் (பூரகம்) வெளிவளியையும் (இரேசகம்) இணைத்தல் வாயிலாக நிரப்புதற்கு உரிய பிராணனாகிய காற்றை அவ்வாறு செய்து தம் வசமாக்கும் கணக்கு அறிவார் இல்லை. காற்றைப் பிடித்துத் தம் வசமாக்கும் கணக்கை அறிந்து அதை ஆள்வார்க்குக் கூற்றை உதைக்கும் குறி அதுவாகும் என்கிறார் திருமூலர்.

இவ்வாறு செய்வது எளியவழி என்றோம். ஆனால் இவ் வழியை உணர்த்தினாலன்றி உணர முடியாது. உணர வேண்டுவார் வடகரை ஆசிரமத்திலாவது நேரில் கட்டுரையாளரை அடைந்தாவது உணர்ந்து கொள்ளலாம். ஐந்தருவி சங்கராஸ்ரமத்தில் வாழ்ந்திருந்த சுவாமி சங்கராநந்தா அவர்கள் திருவருளை முன்னிட்டு இம்முறை கற்றுத் தரப்படும்,

தமிழில் பெயரடைகள்

வீ. ரேணுகாதேவி,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

தமிழ்மொழியில்காணப்பெறும் பெயரடைகளின் பண்புகளை ஆய்ந்தறிந்து அவற்றை வகைப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெயரைச் சிறப்பித்து வரும் வடிவம் பெயரடை (adjective) எனப்படும். பெயரடை தான் சிறப்பித்து வரும் பெயருடன் எண் - பால் இயைபு கொண்டு விளங்குவதில்லை.

பெயரடையும் அதனால் சிறப்பிக்கப்பெறும் பெயரும் இணைந்து பெயரடைத் தொடர் (Adjectival construction) அமையப் பெறுகிறது.

தமிழில் பெயரடைகள்

தமிழ் மொழியிலும் பெயரைச் சிறப்பித்து வரும் வடிவங்கள் பெயரடைகளாகக் கருதப்படுகின்றன[1]. பெயரடைகள் தம்மால் சிறப்பிக்கப்பெறும் பெயர்களுடன் எண் - பால் இயைபு கொள்வதில்லை.

பெயரடைகளின் வகைகள்

பெயரடைகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனிவடிவப் பெயரடைகள் (Simple adjective) கலவைப் பெயரடைகள் (Complex adjective) கூட்டுப் பெயரடைகள் (Compound adjective) என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தனிவடிவப் பெயரடைகள்

பெயரைச்சிறப்பித்து வரும் ஓரசை அடிச்சொற்கள் (mono morphemic stems) தனி வடிவப் பெயரடைகள் எனப்பெறும். 'அ', 'இ', 'இன்', 'ஓர்', 'கார்', 'கூர்' போன்ற வடிவங்கள் தனி வடிவ பெயரடைகளாகச் செயல்படுகின்றன.

கூர் முனை
பெரும் போர்

1, தமிழில் பெயர்களும பிறிதொரு பெயரினைச் சிறப்பித்து வருதலுண்டு. இதனைப் போன்று பெயரெச்சங்களும் பெயரினைச் சிறப்பித்து வருகின்றன, இவ்விரண்டும் வேறுபட்ட சொல்வகைகளைச் சார்ந்தமையால் இவ்வாய்வில் இவை இடம் பெறவில்லை,

கலவைப் பெயரடைகள்

ஒரு வேர்ச் சொல்லும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஒட்டுகளும் இணைந்து ஆக்கம் பெறும் பெயரடை வடிவங்கள் கலவைப் பெயரடைகள் எனப்படும்.

'அந்த', இந்த', 'எந்த', 'கரிய','சில','சிறந்த',சிறிய'நெடிய', 'பல', 'பெரிய', 'புதிய' போன்ற வடிவங்கள் கலவைப் பெயரடைகளாகும்.

சிறிய கண்கள்
புதிய படம்

கூட்டுப் பெயரடைகள்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அடிச் சொற்கள் இணைந்து அமையப்பெறும். பெயரடை வடிவங்கள் கூட்டுப் பெயரடைகள் எனப்படும்.

தமிழ் மொழியில் கூட்டுப் பெயரடைகள் பெரும்பாலும் 'ஆவது', 'ஆன', 'உள்ள' 'உடைய' எனும் வடிவங்களைப் (adjectiralizers) பெயர்ச் சொற்களுடன் nominal stems) இனைப்பதால் ஆக்கம் பெறுகின்றன.

'அழகான', 'அழகுடைய', 'அறிவுடைய', 'அன்புடைய', 'இரண்டாவது', 'ஒன்றாவது', 'கருப்பான', 'வீரமுள்ள', 'வெள்ளையான' போன்ற வடிவங்கள் கூட்டுப் பெயரடைகளாகச் செயல்படுகின்றன.

பெயர் + ஆவது

நான்காவது வகுப்பு
மூன்றாவது படி

பெயர் + ஆன

அழகான பெண்
வெள்ளையான உடுப்பு

பெயர் + உள்ள

வீரமுள்ள மறவர்கள்
பண்புள்ள மனிதன்

பெயர் + உடைய

அறிவுடைய மக்கள்
அன்புடைய அண்ணன்

பெயரடைகளை அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் விளக்கப் பெயரடைகள் (descriptive adjectives) சுட்டுப் பெயரடைகள் (demonstrative adjectives) வினாப் பெயரடைகள் (interrogative adjectives) எண்ணுப் பெயரடைகள் (numaral adjectives) வரையறையில்லாப் பெயரடைகள் (intefinite adjectives) என ஐந்து வகையாகப் பகுக்கலாம்.

விளக்கப் பெயரடைகள் :

தான் சிறப்பித்து வரும் பெயரின் தன்மையினை விளக்கிக் கூறும் பெயரடை வினக்கப் பெயரடை எனப்படும்.

'கார்', 'பேர்', 'முழு', 'கரிய', 'நெடிய', 'பெரிய', 'புதிய', 'அழகான', 'கருப்பான', 'வெள்ளையான', 'சிவந்த', போன்ற வடிவங்கள் விளக்கப் பெயரடைகளாகச் செயல்படுகின்றன.

பெரிய காப்பியம்
வெண்மையான சிறகு

சுட்டுப் பெயரடைகள்

தான் சிறப்பித்து வரும் மனிதனையோ (person) அல்லது பொருளையோ (thing) சுட்டும் பெயரடை ஈட்டுப் பெயரடை எனப்படும்.

'அ', 'இ', 'அந்த', 'இந்த' போன்ற வடிவங்கள் சுட்டுப் பெயரடைகளாகும்.

இம் மனிதன்
அந்த பொம்மை

வினாப் பெயரடைகள்

வினா வாக்கியத்துள்ள வினா தலைமைப் பெயரைச் சிறப்பித்து வரும் பெயரடை வினாப் பெயரடை எனப்படும். 'எ', 'என்ன', 'எந்த', 'எவ்வளவு' போன்ற வடிவங்கள் வினரப் பெயரடைகளுக்குத் தக்க சான்றுகளாகும்.

என்ன விலை ?
எந் நேரம் ?

எண்ணுப் பெயரடைகள்

தாம் சிறப்பித்து வரும் மனிதர்கள் அல்லது பொருட்களின் அளவுகளை வரையறுத்துக் கூறும் பெயரடைகள் எண்ணுப் பெயரடைகள் எனப்படும்.

'ஓர்', 'மூ', 'இரு', போன்ற வடிவங்கள் எண்ணுப் பெயரடைகளாகச் செயல்படுகின்றன.

ஓர் உலகம்
இரு வீடு

வரையறையில்லாப் பெயரடைகள்

தாம் சிறப்பித்து வரும் மனிதர்கள் அல்லது பொருட்களின் அளவினை வரையறுத்துக் கூறாத பெயரடைகள் வரையறையில்லாப் பெயரடைகள் எனப்படும்.

'சில', 'பல', 'நிறைய' போன்ற வடிவங்கள் வரையறையில்லாப் பெயரடைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

நிறைய மாங்காய்
சில நண்பர்கள்

தொடரியல் பண்புகள்

1. தமிழ் மொழியில் பெயரடைகள் எழுவாய்-செயப்படுபொருள்-பயனிலை (Sov) அமைப்புடைய வாக்கியங்களைக் கொண்ட பிற மொழிகளைப் போன்று தாம் சிறப்பித்து வரும் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும்.

இனிய குரல்
பழைய புத்தகம்

ஒரு சில எண்ணுப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் தலைமைப் பெயருக்கு பின்னால் வரும்.

நாய் இரண்டு
மரம் ஒன்று

2. பெயரடைகள் தலைமைப் பெயருடன் எண் - பால் இயைபு கொண்டு விளங்குவதில்லை.

நல்ல பையன்
அழகான பெண்
பெரிய மனிதர்கள்
கரிய நாய்

3. சில சூழல்களில் பெயரடைகள் தாம் உணர்த்தும் பொருளை வலியுறுத்தும் பொருளை வலியுறுத்தும் பொருட்டு இரட்டித்து வரும்.

புத்தம் புதிய வீடு
செக்கச் சிவந்த பழம்

4. ஒரு தலைமைப் பெயரைச் சிறப்பித்து ஒன்றிற்கும் மேற்பட்ட பெயரடைகள் அடுக்கி வருதலும் உண்டு.

கரிய பெரிய யானை
அந்த சிறிய மரம்
அந்த இரண்டு பெரிய வீடுகள்
இந்த மூன்று அழகான குழந்தைகள்

Bibliography :

Agesthialingom, S., 1976 'Adjectives in Tamil', JTS., Vol 9, pp, 23-49.

Andronov, M., 1972 'Notes on the Nature and Origin of the Adjectives in Tamil', IJDL., Vol., 1 : 2, pp. 1-9.

Gopal, A., 1981 Adjectives in Tamil, Unpublished Ph D Dissertation, Annamalai University, Annamalai Nagar.

Hatzer, Robert. 1978 'On the Relative Order of Adjectives' Language Universals, pp. 165-184.

Josephy, A , 1973 Adjectives in Modern Tamil - A Problem in Word Classes, IJDL , Vol. 2 : 2, pp. 321-325.

Murugarathinam, T., 1966 'Adjectives in old Tamil', ICTS -11, pp. 394-400.

Varadarajan, M,. 1964 'Adjectives in Tamil - Old and New', AORMM, Vol. XIX : 2, pp 1-8.

Velupillai, A , 1966 'Adjectives in Tamil', ICTS - 11. pp - 815 - 923.

Zvalebil, K., 1961 'More about Adverbs and Adjectives in Tamil', T. C., Vol. Xi ; 3, pp. 281-290,

"தமிழகத்திற் கதாகாலட்சேபம்"

[ஒரு கவின் கலை நோக்கு]

இரா. குருநாதன், எம். ஏ., எம்ஃபில்,
துணைப்பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சை.

உலகில் தோன்றிய மனிதன் தெய்வீகத் தன்மை, மானிடத் தன்மை, உலகத்தன்மை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குபவன் ஆவான். மேலே தெய்வீகத்தன்மை கீழே உலகத்தன்மை; இடையே மானிடத்தன்மை என்று கூறலாம். கீழே உள்ள உலகத்தன்மையைத் தன்னிலைக்குக் கொணர்ந்து, மேலுள்ள தெய்வீக நிலைக்கு உயரவேண்டும் இதுவே மானிடன் கடமையாகும்.

இத்தகைய கடமையை நிறைவேற்றுவதற்காகவே கதா காலட்சேபக்கலை தோன்றியது. பழைய நிகழ்ச்சிகளைக் கதைகளின் மூலமாகவே சொல்வது நமது மரபாகும். குழந்தைகள் முதல், பெரியோர்கள் வரை கதை கேட்பதில் விருப்பம் உடையவர்களாக இருப்பது இயல்பாகும். கேட்போர் மனத்தில் ஒரு கருத்தைப் பதியவைக்கும் எளிய சாதனம் கதையாகும். அறத்தையும், தருமத்தையும் உணர்த்துவதற்காகவே இராமாயணமும், பாரதமும் கதை வடிவில் தோன்றின.

இன்றைய நாளில் ஆசைகளை வரையறைப்படுத்தத் தெரியாததால் மனித இனம் பலவிதமான சிக்கல்களில் அகப்பட்டு அல்லல் உறுகின்றது. ஆசையை வரையறைப்படுத்தும் முறையினை நமது முன்னோர்கள் அறநூல்களாக ஆக்கி வைத்தனர். பழைய பண்பாட்டு முறைகளை நினைவுபடுத்தும் வகையில் கதாகாலட்சேபக் கலை அமைக்கப்பட்டது.

மராட்டிய மாநிலத்திலிருந்து வந்ததாகக் கதாகாலட்சேபக் கலையைக் கருதுதல் மரபாகும். என்றாலும், தமிழகத்தில் இதற்குரிய வடிவம் இல்லையே ஒழிய அடிப்படைக் கூறுகள் இருந்திருக்கின்றன. வேற்று மாநிலக் கலையானாலும் தமிழகத்தில் வந்து சிறப்பு உற்றதற்கு இதுவே காரணமாகும்.

மனிதன் இன்று அழிவுப்பாதையை நோக்கிச்செல்லும் விலங்கின் நிலைக்கு இறங்கிவிட்டதை உணர்தல் வேண்டும். அவ்வாறு இறங்கிவிட்ட மனித சமுதாயத்தை நிமிர்த்தும் சாதனம் நமது பழங்காலப் பண்பாடுகளாகும்.

பழங்காலப் பண்பாடுகளைத் தொகுத்து நமது முன்னோர்கள் இதிகாசம், புராணம் என்று பெயரிட்டனர். பழங்காலப் பெரியோர்களின் மேலான வாழ்வு நெறிமுறைகளை இக்கால மக்களுக்கு உணர்த்தினால்தான் வருங்கால சமுதாயம் சீரோடு விளங்கும். பழங்காலக் கதைகளை உரையோடு சொல்லும் முறையிலிருந்து இசையோடு சொல்ல ஆரம்பித்தனர். பாட்டு என்பது அனுபவத்தின் விளைவு என்பதால் கேட்போரை ஈர்க்கும் ஆற்றல் கொண்டு விளங்குகின்றது.

மக்களின் புறநிலை வரலாறாகவும், அகநிலை கலையாகவும் மலரும் என்பது அடிப்படைக் கொள்கைகளாகும். கதாகாலட்சேபக் கலை புறவரலாறான மக்கள் வாழ்வைச் செப்பம் செய்ய வந்த அகக் கலையாகும்.

கதாகாலட்சேபங்களில் தொடக்க காலத்துப் பாரதமே அதிகமாகப் பயன்பட்டு வந்தது. கிராம மக்களிடையே இராமாயணக் கதையை விட பாரதக் கதையே அதிகமாகப் பரவி இருந்தது. தமிழகத்துக் கோயில்களில் பாரதம் வாசித்தல் என்ற அமைப்பு ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும் "மகாபாரதத்தில் அடங்காத அறமில்லை", என்ற முதுமொழி பாரதத்தின் பெருமையை உணர்த்தும். பாரதநாடு கிராமங்களை அதிகமாகக் கொண்டு விளங்குகின்றது. பாரத நாட்டின் இதயம் கிராமங்கள் என்று மகாத்மா காந்தி கூறியுள்ளதை நினைத்தல் வேண்டும். கல்வியறிவு பெறாத கிராம மக்களுக்குக் கேட்பதின் மூலமாக அறிவைப் புகட்டும் பணியை இக்கலை மேற்கொண்டது. மக்களுக்கு அறிவுரை புகட்டும் அளவிற்கு அறிவும், ஆத்ம ஞானமும் பெற்ற மேலோர்களே இக்கலையை மேற்கொண்டனர்.

சொற்பொருள் விளக்கம்

காலத்தின் மேன்மையை நமது முன்னோர்கள் சிறப்பாகக் கருதினர். மனிதனின் வாழ்வு கால அளவுக்கு உட்பட்டதாகும். காலம் + சேபம் = காலயாபணம் அதாவது காலம் கழித்தல் என்ற பொருளாகும்[1]. தெய்வீகக் கதையைக் கேட்டுப் பொழுதைப் போக்குதல் என்பதே கதாகாலட்சேபம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்.

---

1. டி. எஸ் சிதம்பர பாகவதர், காலக்ஷேபம் என்ற வ்யாஸம் பக். 2.

தாய்க்கலையும், துணைக்கலையும்

கி. மு. மூவாயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்னர் எல்லாக்கலைகளுமே எழுதாக்கலைகளாகவே இருந்தன[2] காலப் போக்கில் வடிவம் பெற்றன. சான்றோர்கள் கலையை இரு நிலையாகக் கண்டனர். ஒன்று அறிவுக்கலை, மற்றொன்று அழகுக்கலை. இசை, நடனம், ஓவியம், நாடகம் அனைத்தும் அழகுக் கலைகளாகும். கதாகாலட்சேபக் கலையில் அறிவும், நிறைவும் வந்து கவிந்தலினால் கவின்கலை என்று பெயர் பெற்றது. நாடகத்தையும், இசையையும் நடனத்தையும் கொண்டு கதாகாலட்சேபக் கலை திகழ்வதால் கவின்கலைகளில் தனித்த இடத்தைப் பெறுகின்றது.

இக்கலை நாடகத்தைத் தாய்க்கலையாகவும், இசையையும், நடனத்தையும் துணைக்கலைகளாகவும் கொண்டு விளங்குகின்றது. துன்பப்பட்டு இறையனுபவம் பெறுவதைவிட எளிமையாக இசையால் பெறலாம். இசையின் மூலமாக வழிபாடு புரிபவர்கள் தாம் தாம் பெற்ற அனுபவத்தைக் கேட்பவருக்குக் குறையாமல் கொடுக்க முடியும்.

அடங்காத பேய் மனத்தை அடக்கும் அங்குசமாக இசையைக் கண்டறிந்தனர். இசையால் மனம் ஒன்றுபடும் பொழுது புலன் சேட்டைகள் பலிக்காது போய்விடுகின்றன மனம் ஒருமைப்பாட்டை அடையும்பொழுது சகோதர அன்பு ஏற்படும் சகோதர அன்பு மனிதரிடையே ஒற்றுமையை நிலவச் செய்து வாழ்வை மகிழ்வாக்குகின்றது. மனித இனத்தை வாழ்விக்க வந்த கதாகாலட் சேபக்கலை இசையைத்தேர்ந்து எடுத்ததற்கு இதுவே காரணமாகும். தொடக்க காலத்து இக் கலைக்குத் துணையாக இருந்த நடனக்கலை இன்று இல்லை. பாகவதர்கள் அபிநயம் படிப்பதோடு நிறுத்தி விடுகின்றனர். ஆடிக் காட்டுவதில்லை.

மற்ற கலைகள் தெய்வத்தை மனிதனாகக் காட்டும் இக் கலை மனிதனைத் தெய்வமாகவே காட்டும். இக்கலையை மேற்கொண்டவர்களை மக்கள் தெய்வ வடிவாகவே கருதி போற்றுவர். நமது புண்ணிய பூமியான பரத கண்டத்தில் காணப்படும் இக்கலை அனைத்து மன நோய்களுக்கும் மருந்தாகப் பயன்பட்டு வருகின்றது.

---

2. ச. அகத்தியலிங்கம், 'நாட்டுப் பாடல்கள்' கரந்தைத் தமிழ்ச்சங்க மணிவிழா மலர், பக். 244.

கதாகாலட் சேபம் செய்பவர்களை ஒரு இனத்தார் என்று தள்ளி விடாமல் குரல் வளமுடையோர் ஒவ்வொருவரும் நமது முன்னோரின் கொள்கைகளை முறையாகக் கற்று, தற்காலத்தில் எழும் சிக்கல்களுக்கு விடையளித்து நாட்டு நன்மைக்குப் பாடுபட்டால் நமது துன்பங்கள் நீங்கும். ஆசையினால் விளையக் கூடிய தீமைகள்தான் இன்று அதிகம். ஆசைகளில் முதன்மை இடம் வகிப்பது இரண்டு ஆசைகள். ஒன்று பெண்ணாசை, மற்றொன்று மண்ணாசை.

பெண்ணாசையின் விளைவை இராமாயணமும் மண்ணாசையின் விளைவை மகாபாரதமும் கூறுகின்றன.

இலக்கிய சமுதாயப்பயன்

இக்கலையினால் இலக்கியமும், சமுதாயமும் பயன் பெறுகிறது. திருமுக கிருபானந்தவாரியாரின் கதையின் மூலமாக, "திருப்புகழ்", எனும் பக்தி இலக்கியம் மேன்மை அடைந்திருப்பதைக் காணலாம். இன்றைய நாளில் எண் வகையான கோணங்களிலேயே சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன. அவை பின்வருமாறு :

1. அரசியல்
2. சமுதாயம்
3. மதம்
4. பொருளாதாரம்
5. மனித உடம்பு
6. கல்வி
7. உணவு
8. தொழில்[3]

இவ்வெண்வகைக் கோணங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகளை நமது முன்னோர்கள் இதிகாச புராணங்களில் பதிய வைத்துள்ளனர். அதை வெளிப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பு இக்கலையை மேற்கொண்ட பாகவதர்களுக்கு உரியதாகும்.

இக்கலையைச் சமயப் பிரசாரமாகவே கருதினர். சிறுபான்மை கிருத்துவ சமயத்தினரும் இக்கலையை ஏசுமகான் பிறப்பைச் சொல்வதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கலையை மேற் கொண்டவர்களின் வாழ்வியல் முறையாலே இக்கலையின் உயர்வு நிச்சயிக்கப்படுகிறது.

3. டி. எஸ். சிதம்பர பாகவதர், காலக்ஷேபம் என்ற வ்யாஸம் பக். 3,

ஹரிகதை பெயர்க்காரணம்

இராமனுடைய வீரவரலாறுகளை லவனும், குசனும் பாடிய போது இறைவன், புகழ், வழிபாடு இவற்றின் வழியாகப் புராண வடிவெடுத்து சுருதியின் பொருளை வெளிப் படுத்தினார்[4]. கவிதைகளில் வரலாறாய்த் தோன்றிய இறைவனின் பெருமையைச் சொல்வதற்கே இக்கலை தோன்றியது. இக்கலையை மேற்கொண்டவர்கள் பாகவதர் என்று அழைக்கப்பட்டனர். விஷ்ணுவைப் பகவானாக வழி படும் வைணவர்களைப் பாகவதர் என்று அழைப்பது மரபு. விஷ்ணு என்ற வடசொல்லுக்கு எங்கும் நிறைந்திருப்பவர் என்று பொருளாகும். விஷ்ணுவின் கதைகளைச் சொல்வதற்கு இக்கலை ஏற்பட்டதால், "ஹரிகதை", எனும் பெயர் பெற்றது. விஷ்ணுவின் திருநாமங்களில், "ஹரி", என்பதும் ஒன்றாகும். சிவகதையை சொன்னாலும் ஹரிகதை என்று அழைப்பதே மரபாகக் கருதப்பட்டது.

பழைய மரபு

தொடக்க காலத்தில் இக்கலை எப்படி நடந்தது என்று காண்போம். முதலில் குலதெய்வத்தைப் பூசிப்பர். இரண்டாவது வாழ்வின் உயரிய உண்மைக் கோட்பாட்டினை இசையோடு கூறுவர். இதற்குப் பூர்வபதம் என்று பெயர். மூன்றாவதாக அப்படிப்பட்ட உள்ளக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்த அவதாரங்களின் கதைகளைப் பாமரரும் உணரும் வண்ணம் கலையோடு சொல்வர். இடை இடையே இறைவனுடைய நாமத்தைச் சொல்லச் சொல்வர். நான்காவதாக மங்கள ஆரத்தி எடுப்பர். ஐந்தாவது பிரசாதங் கள் வழங்கப்படும்.[5]

இக்கலையின் வேறுபெயர்கள்

ஆந்திராவில் இக்கலையை, "ஹரிகதாகாலட்சேபம்", என்று அழைப்பர், கர்னாடகத்தில் கதாபிரஸங்கம் என்றழைப்பர். மராட்டிய மாநிலத்தில் இக்கலைக்குக் 'கீர்த்தன்', என்றும், சொல்பவர்களை கீர்த்தன்கார் என்றும் அழைத்தனர்.

---

4. டி. பி. இராமச்சந்திர கோஸ்வாமி, 'The Kirthan', The maratta Education Fund Madras Silver Jublee Sovenir (cultural and economic studies பக். 145

5. டி. பி. இராமச்சந்திர கோஸ்வாமி, 'The Kirthan', The Maratta Edueation Fund Madras Silver Jubilee Souvnir (Cultural and economic sludies) பக். 147

தமிழகத்தில் கதாகாலட் சேபம் என்றும், இன்னிசைச் சொற் பொழிவு என்றும் இலக்கிய இன்னிசைப் பேருரை என்றும் அழைக்கப் படுகின்றது.

தமிழகத்தில் இக்கலை

மராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபொழுது இக் கலை தமிழகம் வந்தது. காமாட்சிபாய் எனும் பெண்மணியின் ஆட்சியின் பொழுது மராட்டிய பாகவதர் முக்கூர் இராமசந்திர பாகவதரால் இக்கலை தமிழகம் வந்தது. கலை வளரும் தஞ்சை மண்ணில்தான் முதன் முறையாக முக்கூர் இராமச்சந்திர பாகவதரின் கதை நடந்தது. ஸாகி, திண்டி, ஒவி, பஞ்சசாமரம், ஓவி, அஞ்சனாகீதம், கட்கா, அயங்கம், மத்தகோகிலம் போன்ற பாடல் அமைப்புகள் பாடப்பட்டன[6].

இக்கலையைக் கையாண்ட முறையில் ஒவ்வொரு மாநிலமும் வேறுபடுகின்றது. அம்மாநில மக்களின் மன ஓட்டமே வேறுபாட்டிற்குக் காரணமாகும். மக்களின் சுவைக் கேற்பக் கையாள்வோரே கால ஓட்டத்தில் அழியாது நிற்பர்.

1864ம் ஆண்டுக்குப் பிறகே தமிழகத்தில் இக்கலை வேரூன்ற ஆரம்பித்தது[7]. மராட்டிய முறையில் மக்கள் அமர்ந்திருப்பர். பாகவதரும், பக்கவாத்தியக்காரரும் குறுக்கும், நெடுக்குமாகச் செல்வர். தஞ்சையில் பெரியண்ணா (வேங்கடஸ்வாமி) என்பவரால், ஆதரித்து வளர்க்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ண பாகவதர் முதன்முறையாக நின்று கதை சொல்லி, நடனமும் ஆடினார். [இவரது காலம் 1847-1903 ஆகும்.]

மராட்டியர்கள் தலைப்பாகை, சட்டை, காலில் சதங்கை ஆகியவற்றோடு கதை சொல்லும் பொழுது காட்சி தந்தனர். தமிழ்நாட்டுக் கலைஞர்கள் சட்டை அணியாது, பஞ்சகச்சமும், மேல் துண்டும் அணிந்து காட்சி தந்தனர். இவர்கள் அணியும் ஆடையை 10 × 8 என்பர். பத்துமுழம் வேட்டியையும் எட்டுமுழம் துண்டையும் குறிக்கும். சுமார் நூறு ஆண்டுக்கு முன்புதான் பெரிய புராண அடியார் வரலாற்றைக் கதாகாலட்சேபமாகச் சொல்ல ஆரம்பித்தனர். இதன் பெருமையும் ஸ்ரீகிருஷ்ண பாகவதரைச் சாரும்.

---

6. எம்பார் விஜயராகவாச்சாரியார், 'ஹரிகதை', தென்னிந்திய சங்கீத மாநாட்டுமலர், பக். 86-90.

7. டி. என். சுப்பிரமணியபாகவதர் நேர்முகப்.பேட்டி, நாள் ; 9—4—84.

ஸ்ரீகிருஷ்ண பாகவதரின் புகழால் ஈர்க்கப்பட்ட பலரும் இவர் முறையைக் கையாண்டு இத்துறையில் நுழைந்தனர். தில்லை ஸ்தானம் நரசிம்ம பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், சிதம்பர பாகவதர் அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் சரஸ்வதிபாய் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்கலைஞர்களை சமஸ்தானங்களும், சமீன்தார்களும், ஆதீனங்களும் போற்றியதால் இக்கலை நல்ல நிலையில் வளர்ந்து வந்தது.

இக்கலையைக் கற்பிக்கும் முறை

அப்பியாசம் - சம்பிரதாயம் - சாஸ்திரம் ஆகிய முறையிலே இக்கலை கற்றுத்தரப்பட்டது. குருகுல முறையிலே தொடக்க காலத்து இக்கலை கற்றுத்தரப்பட்டது. இசை கர்நாடக இசை, இந்துஸ்தான் கதை சம்பந்தப்பட்ட பாட்டு (நிருபணம்) ஆகிய முறையில் சொல்லித்தரப்பட்டது. ஒரு கதைக்கு மூன்று மாதம் அவகாசம் கொடுத்துப் பயிற்சி பெறுவோரை மனனம் செய்யச் சொல்வர். இக்கலையைக் கற்க வயது முக்கியமாகக் கருதப்படவில்லை கதையைப் பதித்துக் கொள்ளும் திறமைக்கே முதலிடம் தரப்பட்டது.

கதா காலட்சேபப்பள்ளி

தஞ்சையில் 1963 ம் ஆண்டில் மூன்றாண்டுப் பாடத்திட்டத்தோடு இக்கலையைக் கற்பிக்கும் பள்ளி ஒன்று நிறுவப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்தின் பொருளுதவியால தமிழ்நாடு அறநிலையத்துறை ஏற்று நடத்தியது. திருவையாறு அண்ணாசாமி பாகவதர் முதல்வராக நியமிக்கப்பட்டார். ஆடவரும் பெண்டிரும் இப்பள்ளியில் சேர்ந்தனர்.

பள்ளியில் சேரும் தகுதிகள்

இப்பள்ளியில் சேருவதற்குப் பள்ளியின் இறுதிவகுப்புவரை படித்திருத்தல் வேண்டும். இசையில் உயர்நிலைத் தகுதியும், சமஸ்கிருத மொழிப்பெயர்ச்சியும், தோற்றப் பொலிவும், குரல் வளமும் வேண்டப்பட்டன. இப்பள்ளியில் படித்து முடித்தவருக்குப் பட்டங்கள் வழங்காமல் சான்றிதழ்களே வழங்கப்பட்டன. இப்பள்ளியில் வில்லுப்பாட்டும், இலாவணியும் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆறு ஆண்டுகள் நடைபெற்ற இப்பள்ளி நிருவாகச் சீர்கேட்டினால் மூடப்பட்டது. இன்று

பாகவதர்களின் வீடே இக் கலையைக் கற்பிக்கும் கூடங்களாகக் காட்சி தருகின்றன குவாலியர் சமஸ்தானத்தில் ஹரிகதா பாடசாலை ஒன்று இருந்தது என்பர்.[8]

கதைப்பொருள்

இராமயணம், பாரதம், பாகவதம், புராணம், அடியவர் வரலாறு, ஆகியவையே இக் கலைக்குரிய கதைகளாகக் கையாளப்பட்டு வருகின்றன.

நாளடைவில் உலகப்புகழ் பெற்ற தலைவர்களின் வாழ்க்கையையும் கதாகாலட்சேபமாக ஒரு சிலர் செய்தனர்.

இக்காலத்தில் அரசாங்கக் கொள்கைகளை வெளிப்படுத்தி மக்களுக்குப் புரிய வைக்க இக்கலையைப் பயன்படுத்துகின்றனர். தமிழகத்தில் தலைசிறந்த நடிகர்கள் பாகவதர் வேடத்தில் தோன்றியுள்ளதை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

ஒரு கதையை வசனம், பாடல் என்ற முறையிலே அமைப்பது மரபாகக் கருதப்பட்டது, நந்தனார் சரித்திரத்தைக் கோபால கிருஷ்ண பாரதியார் இம்முறையிலேயே அமைத்திருக்கின்றார்.

பக்கவாத்தியச் சிறப்பு

தொடக்க காலத்தில் தம்பூராவும், மிருதங்கமும் இக் கலைக்குப் பயன்பட்டு வந்தன. பிற்காலத்தில் வயலின் அல்லது ஆர்மோனியம் பயன்பட்டு வருகின்றது. பாகவதர் பாடும் பாடலை மிருதங்க வித்வான் முன்னமேயே தெரிந்திருத்தல் வேண்டும். பாகவதருக்குக் கதை நடுவே ஓய்வு கொடுப் பதற்காகத் தனி வாசிப்பையும் அமைப்பர். இவ்வாத்தியக் கருவி கதைக்கு முக்கியமானதால் அடிக்கடி இவ்வித்வானை மாற்றாமல் ஒருவரையே தொடர்ந்து கதைகளுக்குப் பாகவதர்கள் அழைத்துச் செல்வர்.

நாராயணசாமி அப்பா, அழகுநம்பியா பிள்ளை தஞ்சை பக்கிரியா பிள்ளை, வெங்கட்ராமையர், தாஸ் சுவாமிகள், இராமசாமி அப்பா போன்றவர்கள் மிருதங்க வாசிப்பால் பெயர் பெற்றவர்கள்.

---

8. ஸ்ரீ ஸரஸ்வதிபாய், 'ஹரிகதா பாகவதர்கள்' The Journal of the Music Academy, பக். 171 - 172.

பன்மொழிப்புலமை, குரல்வளம், மந்திரம், சோதிடம், மருத்துவம் போன்ற துறைகளில் பெற்ற அறிவு ஆகியவற்றை பாகவதர்கள் பெற்றிருத்தல் வேண்டும். நின்றுகொண்டு கதை சொல்வதே மரபாகப் பின்பற்றப்பட்டது. வயது காரணமாகச் சிலர் அமர்ந்து சொல்வதும் உண்டு.

காலமும் - நேரமும்

கதையைச் சொல்லும் பொழுது பாத்திரமாகவே, தான் மாறி பாகவதர்கள் குரலை ஏற்றி இறக்கிச் சொல்வதுண்டு. திருமதி. சரஸ்வதிபாய் காலத்தில் இருந்த எதிர்ப்பு இன்று கிடையாது. இக்கதை உலகில் இன்று நிறைய மகளிர் இருக்கின்றனர். தொடக்க காலத்தில் இரவு முழுதும் கதை நிகழ்ச்சி நடைபெற்றது. இன்று சுமார் இரண்டு மணி முதல் மூன்று நேரத்திற்குள்ளாக முடிந்து விடுகின்றது. நகர்ப்புறமாக இருந்தால் ராக ஆலாபனையையும், கிராமபுறமானால் கிராமியப்பாடலையும் இணைத்துப் பாடுவர். இன்னிசை நிகழ்ச்சிகளில் கடைசியாகப் பாடப்படும் தில்லானாவை நிகழ்ச்சிகளில் முதலில் பாடுவர். கதைத் தொடக்கத்திற்கு எந்த பாடலைப் பாடித் தொடங்கினார்களோ அதே பாடலைப் பாடி முடிவு செய்வர். இம்முறையை மாற்றியமைத்தவர்களும் உண்டு.

மக்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்காததால் இத் துறையைச் சேர்ந்த தங்கவேல் செட்டியாரும், தில்லையாடி பாண்டுரெங்க பாகவதரும் தோல்வியைத் தழுவினர். மக்களின் சுவைக்கேற்ப மாற்றிக் கிருபானந்த வாரியாரும், எம்பார் விஜயராகவாச்சாரியாரும் வெற்றி கண்டனர்.

கதைகளில் பயன்படுத்தும் ராகம்-தாளம்

மராட்டிய இசை முறைகளான சாகி, திண்டி, ஓவி போன்ற பாடல் அமைப்புக்கள் இன்று கதைகளில் காணப்படவில்லை. பியாக், கானடா, எதுகுலகாம் போதி, தோடி, சங்கராபரணம், ஆகிய ராகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறவஞ்சி, பள்ளு, கும்மி, தெம்மாங்கு, காவடிச்சிந்து ஆகிய கிராமியப்பாடல்களும் பயன் படுத்தப்படுகின்றன. கதையின் தொடக்கத்தில் கானடா நாட்டை தன்யாசி, கௌளை, அரபி,வராலி ஸ்ரீநாகம் ஆகிய ராகங்களையும், கதையின் முடிவில் சௌராஷ்ட்ரா, சுருட்டி, மத்திமாவதி ஆகிய ராகங்களையும் பயன்படுத்துவர்.

ஆதிதாளம், ரூபகதாளம், மிஸ்ரஸாபு, செம்பை, வறடஉசி ஆகிய தாளங்களைப் பயன்படுத்துவர். கிருபானந்தவாரியார் தம் கதைகளில் மேற்கூறிய தாளங்கள் மட்டுமன்றி ஸ்திர திரிபுடை, கண்டதிரிபுடை, ஆகிய தாளங்களைப் பயன் படுத்துவார்.

உத்திகள்

ஒவ்வொரு பாகவதரும் ஒவ்வொரு வகையான உத்திகளைக் கையாள்வர். உலகநடப்புகள் ஆங்கிலப்பழமொழி, நீண்ட பாடல், நயமான நகைச்சுவை, சிறிய கதைகள், மெய்ப்பாட் டோடு கதை சொல்லல். சபையோரைக் கேள்விகேட்டல் போன்றவை உத்திகளாகக் கையாளப்படும்.

பின்பாட்டுக்காரர்

கதையின் சிறப்புக்கு மிகவும் முக்கியமாகப் பின்பாட்டு கருதப்பட்டது. பாகவதரின் நெருங்கியஉறவாகவே பின்பாட்டுக் கலைஞர் அமைவதுண்டு. கதை சொல்பவர் பெண்ணாயிருப்பின், தாயோ அல்லது தமக்கையோ பின் பாட்டுக்காரராக அமைவதுண்டு குருகுலமுறையில் பயிற்சி பெறுபவர் பின்பாட்டுக காரராக இருந்து பயிற்சி பெறுவர். கிருபானந்தவாரியார் தம் தந்தை மல்லையப்ப தாசரின் கதைக்குப் பின்பாட்டுப் பாடியவர் என்பதை நினைத்துப் பார்த்தல் வேண்டும். பாகவதரின் வசதிக்கு ஏற்ப ஒருவரோ, இருவரோ, பின்பாட்டுக்கு அமைவதுண்டு.

இக்கலை பற்றிய நூட்கள்

இக்கலையைப் பற்றிய சிறியநூல் ஒன்றை 1928 – ஆம் ஆண்டு டி. எஸ். சிதம்பர பாகவதர் இயற்றினார். மராட்டிய நாட்டில், "கீர்த்தனமாலா, ஹரி கீர்த்தன் ரத்னமாலா, போன்ற நூல்கள் காணப்படுகின்றன. இசைமாநாட்டுமலர், நாடக மாநாட்டு மலர், கலைவிழா மலர், நூற்றாண்டு விழா மலர்கள் இக் கலையைப்பற்றிய தகவல்களைக் கட்டுரை வடிவில் வெளியிடுகின்றன. சென்னையிலிருந்து, 'ஹரிஹர ரத்னாவளி" மாத இதழ் மாதம் ஒரு கதையைக் கதாகாலட் சேப முறைக்கு ஏற்றவாறு அமைத்து ராகதாளக் குறிப்புக் களோடு வெளியிட்டு வந்தது. இப்புத்தகத்தைப் படித்து, மன ஆற்றல் உள்ளவர்கள் இக் கலையை மேற்கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

தமிழகக் கலைகளில் கதாகாலட்சேபத்தின் அடிப்படைக் கூறுகள்

தமிழகத்துக் கிராமியக் கலைகளில் இசையே முதலிடம் பெறுகின்றது. கதாகாலட்சேபக்கலையும் இசையை முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றது. பக்தியை விளக்கும் முகமாகவே இக்கலை தோன்றியது பக்தியின் பிறப்பிடமாகத் தமிழகத்தைச் சொல்வர்[9].

தமிழக நாட்டுப்புறக் கலைகளை தொன்மைக் கலை, திருந்தியகலை, நாட்டுப்புறக்கலை என்ற முப்பெரும் பிரிவாகப் பிரிப்பர்[10]. கலைகள் நடத்தப் பெறும் காலம் சூழல் ஆகியவற்றைக் கொண்டு சமூக சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள், போரியல் கலைகள் என்று பாகுபடுத்துவர்[11].

பழைமையை விளக்கும் கலைக்குத் தொன்மக்கலை என்று பெயர். நாட்டுப்புற மக்கள் பல தெய்வங்களை வணங்குபவர்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு கதை உண்டு. இதிகாச நிகழ்ச்சிகளைக் கதைகளின் மூலமாகவே மக்கள் கேட்க விரும்புவர். இத்தன்மையினால் இன்றும் இக் கலைகள் நிலைத்த இடத்தைப் பெற்று விளங்குகின்றன. இத தொன்ம விளக்கக் கலைப்பிரிவில் கதாகாலட்சேபத்தை அடக்குவர்.

பாரதம் வாசித்தல், வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம் தெருக்கூத்து ஆகிய தமிழக நாட்டுப்புறக் கலைகளில் கதா காலட்சேபத்தின் அடிப்படைக் கூறுகள் நிறைந்து காணப் படுகின்றன.

சமுதாயச்சிக்கல்களைத்தீர்க்கும் முறைகளைச் சொல்வதாலும், நன்னெறியைக் கூறுவதாலும் இக்கலையை மேற்கொண்ட பாகவதர்களை ஆசிரியர்கள் என்றே கூறலாம். நூலாசிரியரின் இலக்கணமாக நன்னூலாசிரியர் கூறும்,

"குலனருள், தெய்வம், கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை.
நிலமலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்,

9. ச. தண்டபாணி தேசிகர், 'பக்திமொழி தமிழ்', மூன்றாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், பக். ச. 15.

10. ஏ. என். பெருமாள், தமிழக நாட்டுப்புறக் கலைகள், பக். 6.

11. மே. நூ., பக். 20

உலகியல் அறிவோடு உயர் குணம் இணையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே". (நூற்பா 26.)

என்ற இலக்கணம் பாகவதர்களுக்கும் பொருந்துவதாகும்.

கதாகாலட்சேபத்தின் இன்றைய நிலை

கோவில்களில் மட்டும் நடைபெற்று வந்த இக்கலை இன்று திருமண வீடுகளிலும், பொது இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. கதையின் தொடக்கத்தில் பாடப்படும் பஞ்சபதி எனும் ஐவகைப்பாடல் அமைப்பினை (விநாயகர், ராமன், ஆசான் சரஸ்வதி, அனுமன்) ப் பாடாமல் விநாயகர், சரஸ்வதி துதியோடு சிலரும், திருப்புகழைப்பாடிச் சிலரும், கதையைத் தொடருகின்றனர். பஞ்சபதி, நாமசித்தாந்தம், சரித்திர பிராரம்பம், உபசம்ஹாரம் என்ற பழைய முறை இன்று காணப் படுவதில்லை.

பாகவதர்கள் பெற்ற பட்டங்கள்

ஹரிகதா திலகம், ஹரிகதா சாம்ராட், ஹரிகதா பூஷணம், ஹரிகதா ப்ரவீனர், கீர்த்தன குலசேகரர், ஹரிகதா கேசரி போன்ற பட்டங்களை மக்களே அளித்தனர். தற்போது தமிழக அரசு, "கலைமாமணி", எனும் பட்டத்தை இக் கலைஞர்களுக்கும் வழங்கி வருகின்றது.

மத நம்பிக்கை பெருகப்பெருக மனிதனின் திருட்டுப் புத்தி குறைந்து விடுகின்றது. பாவபுண்ணியம் பற்றிய விளக்கங்கள் பயங்கர பாவிகளை மாற்றி அமைத்திருக்கின்றன[12].

நமது சிறைச்சாலைகளில் மாலை ஆறு மணிக்கே கைதி களைப் பூட்டி அடைத்து விடுகின்ன்றனர். இதனை விடுத்து ஆறு மணி முதல் எட்டு மணி வரை சமயச் சொற்பொழிவு நடத்தச் செய்யலாம்.

கோவில்களில் மட்டுமன்றி, பள்ளி, கல்லூரிகளிலும் இக் கதை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யலாம். ஆன்மீகக் கல்வியால் தான் மனம் செம்மைப்படும் என்று நமது முன்னோர்கள் நம்பினர்.

இக்கலையை மறந்திருக்கும் பெரிய சங்கீத சபைகள் மீண்டும் இக்கலைக்கு இடம் தருவதால் இக்கலை வளர வாய்ப்பு இருக்கின்றது.

---

12. கவிஞர் கண்ணதாசன், நம்பிக்கை மலர்கள் பக். 37.

இக்கலையைத் தொழிலாக நினைத்துச் செய்து வந்ததால் தான் தொய்வு ஏற்பட்டது. ஒரு சேவையாக நினைத்துச் செய்வோர்கள் நிறைய முன்வர வேண்டும்.

நிறைவுரை

கலாசாலைகளும், கல்லூரிகளும் நமக்குப் பல நன்மை புரிந்திருப்பினும் மனம் பண்பட நம்முடைய மதமே பெரிதும் துணை புரிந்திருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டவே கதாகாலட்சேபக்கலை தோன்றியது.

வேற்று மாநிலக் கலையானாலும் தமிழகம் புகுந்த போதே இக்கலை சிறப்பு உற்றது என்பது வரலாறு காட்டும் உண்மை யாகும். மனித நிலையைத் தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்லும் இக்கதாகாலட்சேபக்கலை மீண்டும் பழைய நிலையை அடைய வேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. கண்ணதாசன், கவிஞர், நம்பிக்கை மலர்கள்
   சென்னை : வானதி பதிப்பகம், 1981 (மு. ப.)
2. சிதம்பர பாகவதர், டி. எஸ், காலக்ஷேபம் என்ற வ்யாஸம்.
   திருச்சி : ஜெகம் அன் கோ, 1978 (மு. ப.)
3. பெருமாள் ஏ. என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள்.
   சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1980 (மு ப)

சிறப்பு மலர்கள்

1. கரந்தைத் தமிழ்ச்சங்க மணிவிழா சிறப்பு மலர்
   கரந்தை : கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1973.
2. தமிழிசைச் சங்க ஆண்டுமலர்
   சென்னை : 1974
3. *The maratta Education Fund madras Silver Jubilee Souvenir* (Cultural and economic stuces) Madras : 1937

இதழ்கள்

1. ஹரிகரரத்னாவளி
2. The Journal of the music Academy (A quartly devoted to the advancement of the Science and Art of music) Madras : 1932

நேர்முகப் பேட்டி

1. சுப்பிரமணிய பாகவதர், டி. எஸ்., நாள் 8—4—84.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

சூ. 85 ; மருட்பா ஏனை இரு சாரல்லது
தானிது வென்னும் தனிநிலை இன்றே

கருத்து : மருட்பாவிற்குத் தூக்குறுப்புப் பற்றியதொரு விளக்கம் கூறுகின்றது.

உரை : மருட்பாவாவது அகவலும் செப்பலுமாகிய இருசார் தூக்குறுப்பான் வருவதல்லதுதான் இத்தூக்கோசைக்கு உரியது என்னும் தனிநிலையுடையதின்று.

ஏனை இருசாராவது அகவலும் செப்பலுமமாம் ; என்னை ?
பாவிரி மருங்கினைப் பண்புற விரிப்பின்
ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு
ஆயிருபாவினுள் அடங்குமென்ப (சூ - 108) எனவும்

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியெனமொழிப (சூ - 107) எனவும்
பின்னர் இரண்டாக அடக்கிக் கூறப்படுதலின் என்க. இக் கருத்தான் ஏனை இரண்டென்னாது, 'இருசார்' என ஓதினார் ஆசிரியர், அதனான் செப்பல் முன்னும் அகவல் பின்னும் வருதலும் கொள்க. பாட்டு வகையான் மருட்பா வேறாயினும் ஓசை பற்றிய தூக்கு வகையான் வேறாகாதென்பது கருத்து.

எனவே தூக்கோசை நான்கு வகைப்படுமென்பது பெறப் பட்டது.

சூ. 86 : அவ்வியல் அல்லது பாட்டாங்குக் கிளவார்.

கருத்து : தூக்குறுப்பான் பாட்டினை வரையறை செய்கின்றது

உரை : எழுவகை நிலத்துள், மேற்கூறிய நால்வகைத் தூக்கோசையாகிய இலக்கணத்தானல்லது பாட்டினைக் கிளத்தல் செய்யார் நல்லிசைப் புலவர்.

பண்ணொடு வரும் பரிபாடலும் பண்ணத்தியும் இந்நால் வகைத் தூக்கினுள் அடங்குதலின் அவ்வியல் அல்லது பாட்டுக் கிளவார் என வரையறை செய்தார்.

சூ. 87 : தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

கருத்து : தூக்குறுப்பின் தொகையை வலியுறுத்தி ஐயமகற்று கின்றது.

உரை : தூக்கென்னும் செய்யுளுறுப்பு இயலும் வகையாவது, மேற்கூறிய அவ்வளவினவே எனக்கூறுவர் புலவர். ஆங்கென்றது, அந்நான்கு என்றவாறு

அராகமும் மூடுகியலும் எண்ணும், வண்ணமுமாகிய வற்றான் தூக்குப் பலவாக வருங்கொல்? எனநின்ற ஐயம் நீங்க "வகையே ஆங்கென மொழிப" என்றார். வகை ஆங்கே என ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிக் கொள்க.

இத்தொகைச் சூத்திரத்தைப் பின்னது நிறுத்தல் என்னும் உத்தியாற் பிற்கூறினார். இவ்வாறு கூறுதல் இவ்வாசிரியர் இயல்பென்பதனைத் தொடை அளவு பற்றிய இலக்கணங் கூறுமிடங்களான் அறியலாம்.

தொடை

சூ. 88 : மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப

கருத்து : நிறுத்த முறையானே தொடை என்னும் செய்யுளுறுப்புக் கூறத் தொடங்கி அதன் வகையாமாறு கூறுகின்றது.

உரை : மோனை எதுகை முரண் இயைபு எனத் தொடை வகைகள் நான்கு நெறியினையுடைய மரபினவாகும் எனக் கூறுவர் புலவர்.

மரபு பற்றி வரும் சிறப்பில்லாத் தொடைகளும் உளவாதலின் நால்கென்னாது 'நால்நெறி' என்றும்; அவை அடியும் சீரும் பற்றி விரிதலின் தொடை என்னாது "தொடை வகை" என்றும் கூறினார். அவற்றைப் பின்னர் விதந்து கூறுவார்.

சூ. 89 : அளபெடை தலைப்பெய ஐந்து மாகும்.

கருத்து : அளபெடையும் தொடை வகையாக வரும் என்கின்றது.

உரை : மேற்கூறியவற்றொடு அளபெடையையும் கூட்டத் தொடை வகை ஐந்தும் ஆகும்.

செய்யுளிசை அளபெடை செயற்கை ஆதலின் பிரித்துக் கூறினார் என உணர்க.

சூ. 90 : பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும்
அமைந்தவை தெரியின் அவையுமார் உளவே

கருத்து : பிறிதொருசார் தொடை வகை கூறுகின்றது.

உரை : பொழிப்புத்தொடையும், ஒரூஉத்தொடையும், செந்தொடையுமாக அமைந்துள்ளவற்றை ஆராயின் அவையும் உளவாகும். இவை சீர்களை நோக்கி ஓரடிக்கண் கொள்ளப் பெறுவன ஆதலின் பிரித்து இழிவு சிறப்புண்மை தொடுத்துக் கூறினார் என்க. மோனை முதலாயின இன்றிச் செஞ் சொல்லாய் அடிநிரம்புவனவும் தொடையாகக் கொள்ளப் படுதலின் செந்தொடை என்னாது 'செந்தொடை மரபு' என்றார்.

"அமைந்தவை தெரியின்" என்றதனான் பொழிப்பும் ஒரூஉவும் போல, சீரின்கண் அமைந்து வருவன பிறவும் உளவெனக் கொள்க. அவையாவன இணையும் கூழையும் முற்றுமாம்.

சூ. 91 : நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.

கருத்து : மற்றொருசார் தொடைவகை கூறுகின்றது.

உரை : பெயரொடு பெயரையும் பெயரொடு வினையையும் நிரலே நிறுத்தமைத்தலும், ஒரு சொல்லே (சீரே) இரட்டிவரயாத்தலும் மேற்கூறிய இலக்கண முறைமையான் தொடையாக நிறைவுற்று வரும் எனக் கூறுவர் புலவர்.

இவை சிறப்பிலவாயினும் தொடையாகக் கொள்க என்பது கருத்து. நிரனிறை ஓரடியினின்று மற்றொரு அடிக்கண்ணும் விரவுதலானும் இரட்டைத்தொடையானது மோனை-எதுகை-இயைபென்றற்கும் ஏற்ப நிற்றலானும் இவற்றின் சிறப்பின்மை தோன்ற இறுதிக்கண் கூறினார். நூலோர் பேற் கொண்டுள்ளமையின் "என்ப" என்றார்.

நிரல் நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல் வேறுநிலைஇப் பொருள்வேறு நிலையல்
(சொல்-406)

என அதன் இலக்கணம் சொல்லதிகாரத்து ஓதப்பட்டமையின் ஈண்டு "நிரல்நிறுத்தமைத்தலும்" எனவாளா கூறினார். சொன்முடிபாகிய பொருள்கோள் இலக்கணம் பற்றி ஆண்டுக் கூறினார்; ஈண்டுத் தொடை இலக்கணம் பற்றிக் கூறினார் என அறிக.

இரட்டை யாப்பு என்பது சொல்லின் முடியும் இலக்கணத்தாய் நின்றது.

'நிரனிறை, இரட்டை' என வாளா கூறாமல் அவற்றின் இலக்கணம் புலப்பட நிரல் நிறுத்து அமைத்தலும், என்றும் இரட்டை யாப்பும் என்றும் கூறினார். எனவே நிரனிறைத் தொடை இரு வகைப்படுமென்றும் இரட்டைத் தொடை ஒன்றே என்பதும் புலப்படும்.

ஏனையவை பற்றிய இலக்கணங்களை மேற்கிளந்து கூறுவர்.

(எ – டு) கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடை நோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சிமகள்
துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயு மற்று.

இவை பெயரொடு பெயரை நிரலே நிறுத்த நிரனிறைத் தொடை

அடல்வேல் அமர் நோக்கி நின்முகங்கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதியம் ஆமென்று தாம்.

இது வினையொடு பெயரை நிரலே நிறுத்த நிரனிறைத் தொடை.

இனி எதிர்நிரனிறை மூறைநிரனிறை, மயக்க நிரனிறை எனப் பிறவாறும் விரித்துக் கூறுவார் பிறர். அவையாவும் பெயரும் வினையுமாகிய இரண்டின்கண் அடங்குமாறறிக.

இனி இரட்டைத்தொடை வருமாறு :-

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற்றிருந்த புலவர்காள் எனவும்
ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீரெரி ஒக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம் எனவும் வரும்.

உரையாசிரியன்மார் இவற்றை வேறாக எண்ணிக் கொள்ளாமல் முற்கூறியவற்றுள் அடங்கும் எனக் கூறி விடுத்தனர்.

"ஆசிரியர் மொழிந்தவற்றியலான் முற்றும்" என்றதனால் இவையும் தொடை வகை என்பதே அவர்தம் கருத்தாகும். உரையாளர் இவற்றை மோனை எதுகையுள் அடங்குமெனக் கூறிவிடுத்தமை பொருந்தாமை உணர்க.

ஒரு செய்யுட்கண் தொடை ஒன்றே வரல் வேண்டுமென்பது யாப்புறவில்லை. ஒன்றும் பலவும் வரலாம். எழுத்து வகையான் மோனை எதுகை அளபெடை எனவும் எழுத்தும் அசையுஞ் சீரும் பற்றிய வகையான் இயைபெனவுஞ் சொல் வகையான் முரண் எனவுஞ் செந்தொடை எனவுந் தொடை வேறுபாடு கோடல் இலக்கணமாம். அம்முறையாற் சொல் பற்றி வரும் நிரனிறையுஞ் சீர் பற்றி வரும் இரட்டையும் கொள்ளல் வேண்டுமென்பதே ஆசிரியர் கருத்தென்பதை "மொழிந்தவற்றியலான் முற்றும்" என்பதனால் அறியலாம்.

நிரனிறையையும் முரணையும் இடைக்காலத்தார் அணி வகையாகவும் கூறுவர். நிரனிறையைப் பொருள் கோள்வகையிலுங் கூறுவர். இவ் ஆசிரியர் இவற்றைத் தொடைவகையுள் கூறினார். இவற்றின் சிறப்பின்மை தோன்ற "செந்தொடையொடு இயைபுபட இறுதிக்கண் கூறினார். அதனான் இவற்றைத் தொடையாகக் கொள்ளல் வேண்டுமென்பதே ஆசிரியர் கருத்தென்பது விளங்கும்.

இரட்டைத் தொடையானது, மோனை, எதுகை, இயைபு என்னும் மூன்றற்கும் ஒத்தலின் ஒன்றன்பால் அடக்குதற்கு ஏலாமையின் அதனை வேறுபடுத்திக் கூறினார் என அறிக.

சூ. 92 : அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை

கருத்து : மோனைத் தொடைக்கு இலக்கணங் கூறுகின்றது.

உரை : ஒரு செய்யுளுள் அடிதோறும் முதல் எழுத்து ஒத்து வருதல் மோனைத் தொடையாகும்.

முன்னை என்னும் இயற்சொல் மோனை எனத் திரிந்து இலக்கணக் குறியீட்டுச் சொல்லாயிற்று.

'அடிதொறும்' என்பதனை மேல் வருவனவற்றொடும் கட்டிக் கொள்க. "ஆயிருதொடைக்கும் கிளைஎழுத்துரிய" என்பதனான் அடிமோனைத் தொடை இருவகைப்படும் என்க.

எ. டு. கேள்கே டூன்றவும் கிளைஞரா ரரவும்
கேளல் கேளிர் கெழீஇயின ஒழுகவும்
(அகம்-93) எனவும்

இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை (குறள்-53) எனவும் வரும்.

சூ. 93 : அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்

கருத்து : எதுகைத் தொடைக்கு இலக்கணங் கூறுகின்றது.

உரை : மேற்கூறிய தலையெழுத்தை விட்டு அதற்கு அடுத்த எழுத்து அடிதொறும் ஒத்துவரின் அஃது எதுகைத் தொடையாகும். எதிர்னை என்னும் இயற்சொல் திரிக்கப் பெற்று எதுகை என இலக்கணக் குறியீடாக நின்றது.

எ. டு. விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
(அகம்-91)

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (குறள்-1) எனவரும்

அஃதொழித்தொப்பது என்னாது ஒன்றின் என்றமையான் முதலெழுத்து அளவான் (மாத்திரை) ஒன்றுதல் வேண்டுமெனக் கொள்க. கிளை எழுத்து வகையான் அடி எதுகையும் இரு வகைப்படும் என்க.

சூ. 94 : ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய.

கருத்து : மோனை, எதுகை எழுத்துப்பற்றியதொரு புறனடை கூறுகின்றது.

உரை : மேற்கூறிய மோனைத்தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் ஒத்தஎழுத்துக்கள் வருதலேயன்றி அவ்வவற்றிற் குரிய கிளை எழுத்துக்கள் வந்தும் அவ்வத்தொடையாதற்கு உரியனவாகும்.

கிளையெழுத்துக்கள் இவை என ஆசிரியர் எடுத்துக் கூறிற்றிலர். ஒருகால் கூறப்பெற்ற சூத்திரங்கள் விடப்பெற றிருத்தலும் கூடும். ஆயினும் ஆசிரியர் இந்நூலுள் அமைத் துள்ள சூத்திரங்களிற் காணப்பெறுவனவற்றையும் நோக்கிக் கிளை எழுத்துக்களை ஒராற்றான் உய்த்துணரலாம். கொள்ளப் பெறுவன வருமாறு :

உயிர், உயிர்மெய் எழுத்துக்களுள் அ, ஆ, ஐ, ஔ வும். இ, ஈ, எ, ஏ வும், உ, ஊ, ஒ, ஓ வும். இவை ஊர்ந்த உயிர்மெய் களும் கிளையாம்.

பிறப்பியலுள் ஐகார ஔகாரங்களை முறையே இகர உகரங்களொடு சேர்த்துக் கூறியுள்ளனரே எனின், ஆண்டு உயிர்ப்பிசையின முடிபு நிலை நோக்கிக் கூறப்பட்டது. ஈண்டு உயிர்ப்பிசையின் தொடக்கநிலை நோக்கிக் கிளையாகக் கொள்ளப்பட்டதென்றறிக. இதனை

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் — எனவும்
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் — எனவும்
காப்பின் கடுமை கையறவரினும் — எனவும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும் — எனவும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும் — எனவும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின் — எனவும்

வரும் சூத்திரங்களானும் பிறவற்றானும் அறியலாம்.

இனி மெய்யுள் வல்லெழுத்தாறும் தம்முள் கிளையாகும் மெல்லெழுத்திற்கும் இடையெழுத்திற்கும் இஃதொக்கும். மேலும் இவற்றுள் ய, ஞ - த, ச - ம, வ தம்முட்கிளையாக வரும். இவை பிறப்பிட ஒற்றுமையாற் கிளையாயின.

கிளையெழுத்துக்கள் பெரும்பான்மையும் சீர்கண் வருந் தொடைகள் மாட்டுச் சிறப்பாக வரும் என அறிக.

(எ-டு) கண்டற் கானல் குருகினம் ஒலிப்ப-இணைமோனை
உவவுமதி யுருவின் ஓங்கல் வெண்குடை-கழை
மோனை

கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடையார்

இது கிளை எழுத்து அடி எதுகை.

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடுசிதறி

தக்கார் தகவிலரார் என்பதவரவர்
எச்சத்தாற் களப்படும்.

இவையும் கிளை எழுத்து அடியெதுகை.

சூ. : மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

கருத்து : முரண் தொடையிலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : சொல்நிலையானும், பொருள் நிலையானும் தம்முள் மாறுபட வருதல் முரண்தொடையாம்.

இத்தொடை இரண்டிரண்டடிகளிற் காணல் வேண்டும். அங்ஙனம் அடிதொறும் மாறுபட்டு வரும் முரண்தொடை மூவகைப்படும். அவையாவன, சொல்லொடு சொல் முரணுதல், சொல்லொடு பொருள் முரணுதல், பொருளொடு பொருள் முரணுதலாம்.

(எ-டு) நெடுநீர்ப் பரப்பின் ஞாறுநர் தந்த
செல்வி வாய்ந்த செம்பாட் டீரத்து
வெள்ளை வெண்மறி மேய்புலத் தொழிய
செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்று நிறத்தழுத்தலின்

இவை சொல்லளவில் முரணாயின.

செவ்வரை நிவந்த சேணிடை யருவி
வெண்மறி கறித்த முல்லை,
நீரோரன்ன சாயல்
தீயோ ரன்ன வென் உரனவித்தன்றே

இவை சொல்லானும் பொருளானும் முரணாயின.

தேரும் யானையும் குதிரையும் பிறவும்
கண்ணும் தோளும் முலையும் பிறவும்
கண்ணும் தோளும் தண்ணறுங் கதுப்பும்

இவை பொருளால் முரணாயின.

இதனை ஐந்தாக விரிப்பர் பேராசிரியர். விரிப்பினும் அவை இம்மூன்றினுள் அடங்குமாறறிக. மற்று அவர்தம் எடுத்துக் காட்டுக்களுள், கூறப்படும் இலக்கணத்திற் பொருந்தாதனவும் உள. அவற்றை அவர்தம் உரையுட் கண்டு ஓர்ந்தறிக.

சூ. 96 : இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே.

கருத்து : இயைபுத் தொடை இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : அடிதொறும் இறுதிநிலை ஒத்துவருதல் இயைபுத் தொடையாம். யாத்தல் தொடுத்தலாகலின் யாப்பு என்றார்.

'இறுவாய்' எனப் பொதுப்படக் கூறினமையான் எழுத்தியைபும், அசைஇயைபும், சீரியைபும் கொள்ளப்படும், அவ்வாற்றான் இயைபுத்தொடை மூவகைப்படுமெனக் கொள்க.

புள்ளும் ஓராம்
விரிச்சியும் நில்லாம் (குறு - 218)

இஃது அடி எழுத்தியைபுத் தொடை.

(எ - டு) அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை

இஃது அடியெழுத்தியைபுத் தொடை - அசையியைபெனினும் ஒக்கும்.

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும் (குறு - 31)

இஃது அசையியைபுத் தொடை.

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரன்தலை தோன்றா ஊரரு மல்லர் (குறு-203)

இது சீரியைபுத் தொடை.

சூ. 97 : அளபெழின் அவையே அளபெடைத் தொடையே

கருத்து : அளபெடைத் தொடையின் இலக்கணங் கூறுகின்றது.

உரை : செய்யுளிசை நிறைத்தல் வேண்டி அடிதொறும் அவையெழுந்து நிற்பின் அவையே அளபெடைத் தொடையாகும்.

ஒற்றளபெடையையும் கருதி "அவையே" என்றார். தனிமொழிக்கண் இயற்கையளபெடையைத் தொடையாகக் கொள்ளுதலை நீக்கி இசைநிறை அளபெடையையே தொடையாகக் கொள்ளுதல் வேண்டுதலின் "அளபெழின்" அவையே என்றார். ஏகாரம் பிரிநிலை. இறுதி ஏகாரம் ஈற்றசை.

(எ - டு) ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது
உருஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு
இவை உயிரளபு - அடியளபெடைத்தொடை
வண்டு வீழும் மலர்நெடுங் கூந்தலாள்
பண்ண்டை நீர்மை யிலள்
எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகுவார்க்கில்லை வீடு.

இவை ஒற்றளபு ; அடியளபெடைத்தொடை.

உயிரளபெடையும் ஒற்றளபெடையும் அடிதொறும் வரும் தொடைக்கண் விரவிவாரா, சீர்தொறும் வரும் தொடைக்கண் விரவி வரும் எனக் கொள்க. இடைக்காலத்தார் ஈரிடத்தும் விரவி வருதலைக் கொள்வர்.

சூ. 98 ; ஒருசீ ரடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவோ ராறே

கருத்து : இதுகாறும் அடிதொறும் படும் தொடை கூறி, இது முதல் இரண்டு சூத்திரத்தான் சீர்தொறும் படும் தொடை கூறுவாராய், இதனான் பொழிப்புத் தொடை ஆமாறு கூறுகின்றார்.

உரை : நாற்சீரடியுள் ஒருசீர் இடையிட்டு எதுகை அமைந்து நிற்பின் அதனை பொழிப்புத்தொடை எனக் கூறுதல் இலக்கண நூலோர் நெறியாம்.

இதனான் சீர்தொறும் வருதலே சிறப்பென்பது புலனாம். எதுகை சிறப்புடைத்தாதலின் விதந்து கூறினார். ஏனைய

மோனை, முரண் இயைபு அளபெடை நிரனிறைத் தொடைகட்கும் உரையிற் கோடல் என்னும் உத்தியால் இவ் விலக்கணம் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டுப் பின்னர்க்காட்டப் பெறும்.

சூ. 99 : இருசீரிடையிடின் ஒரூஉ என மொழிப.

கருத்து : ஒரூஉத் தொடையினிலக்கணங் கூறுகிறது.

உரை : நாற்சீரடிக்கண் இடையிரு சீர்கள் இன்றி எதுகை முதலாயினவரின் அவை ஒரூஉத் தொடை எனக் கூறுவர் புலவர்.

இங்ஙனம் இடையிட்டு வருதலை எடுத்துக், கூறி மொழியாததனை முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியான் இணைந்து வருந்தொடைகளைக் கொள்ள வைத்தார் என அறிக. அவையாவள முதலிரு சீர்க்கண் வருவன இணை என்றும் முதல் மூன்று சீர்க்கண் வருவன கூழை என்றும் நான்கு சீரினும் வருவன முற்று என்றும் மரபு நோக்கிக் கொள்ளப் பெறுவன.

ஆக, சீர்நிலை பற்றி வரும் தொடைகளுள் இவ் ஐந்தும் சிறப்புடையனவாம்.

இனி இரண்டாம் சீரின்றி ஏனையவற்றின்கண்ணும் மூன்றாம் சீரின்றி ஏனையவற்றின்கண்ணும் பின் இரண்டு சீரின்கண்ணும், மூன்று சீரின்கண்ணும், நடு இரு சீரின்கண்ணும், இரண்டாம் சீரினும் இன்றி ஏனைய சீர்க்கண்ணும் வருவனவற்றையெல்லாம் ஆராய்ந்து கொள்ளப்புகின் அவை வரம்பிலவாம் ஆதலின் அவை சிறப்பில்லாதனவாகும். இதனைத் தொகைச் சூத்திரத்தை ஆசிரியர் அமைத்து கூறுமாற்றான் உய்த்துணர்க. இவற்றிற்கு எடுத்துக்காட்டு.

மோனை

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு (முருகு-1) இணை மோனை

செருநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (முருகு-1) பொழிப்பு மோனை

உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை (புறம் 3) கூழை மோனை

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும் (புறம் 6) ஒரூஉ மோனை

கற்க கசடற கற்பவை கற்றபின் (குறள்) முற்றுமோனை

எதுகை

மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின் (குறள்) இணை எதுகை

பொன்நேர் மேனி நன்னிறம் சிதைத்தோர், பொழிப்பு ,,
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து கூழை ,,
உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை (குறு-67) ஒரூஉ ,,
இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
(நால -) முற்று ,,

முரண்

நிலவும் இருளும் போல்வ நீள்வரை இணை முரண்
வருதும் எனமொழிந்தார் வாரார்கொல் காணம்.
பொழிப்பு ,,
தேரும் யானையும் குதிரையும் பிறவும் கூழை முரண்
இன்சொற் குழியுள் இனிதெழும் வன்சொல் ஒரூஉ ,,
நிலனும் நீரும் தீயும் விசும்பும் முற்று

இயைபு

இயைபுத் தொடைகாணுங்கால் இறுதிச் சீரினை முதற் சீராகக் கொண்டு காணுதல் இலக்கண மரபென அறிக.

ஓங்கிய சுரத்தை நீங்கி ஏகி இணைஇயைபு
விரிந்தானா மலராயின் விளிந்தாலுங் குயிலாயின் -
— பொழிப்பு ,,
பொருசமத் தெழுவனர் ஒருவினர்
விரைவனர் — கூழை ,,
கரவெழும் கன்னற் குழியுள் இரவெழும் ஒரூஉவியைபு
இயற்கையின் உடைமையின் முறைமையின்
கிழமையின் — முற்று ,,

அளபெடை

பேஎய்க் கொளீஇயள் இவளெனப்படுதல்
— இணை அளபெடை
சுறாஅக் கொட்டும் அறாஅ இருங்கழி பொழிப்பு ,,
விடாஅ விடாஅ வெரீஇப் பெயரும் கூழை ,,
வுழாஅ நெஞ்சிற் றெய்வமும்
தொழாஅள் ஒரூஉ ,,
தொழாஅள் எழாஅள் விடாஅள்
தொழாஅ முற்று ,,

நிரனிறை

கருவிளை கார்முல்லை கண்ணீ கூரெயிறு இணை நிரனிறை
கரும்பு கவின் சொல்லாம் கன்னிக்கு பொழிப்பு ,,
கணைபிணைகண் கொவ்வையிதழ்
காரளகம் பாவையவள் கூழை ,,
முத்துக்கோதி தன்ன முகஞ்செய் முறுவல் ஒருஉ
முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
முற்றுநிரநிறை

இனிச் சீர்தொறும் காணும் தொடைகள் விரவியும் வரும், அல்வழிச் சிறந்து வருவனவற்றால் தொடை கூறி ஏனையவற்றைத் தழுவிக் கொள்க.

சூ. 100 : சொல்லிய தொடையொடு வேறுபட்டியலின்
சொல்லியற் புலவரது செந்தொடை என்ப.

கருத்து : செந்தொடையின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : பொழிப்பு முதலாக கூறப்பெற்ற சீர்நிலைத் தொடைகளும் மோனை முதலாய அடிநிலைத் தொடைகளும் ஆகியவற்றுள் ஒன்றும் பெறாமல் அவற்றொடு வேறுபட்டு நடப்பின், செய்யுட்கண் தொடைப்பட்டு நிற்கும் சொல் லமைப்பினைத் தெரிந்த இலக்கண நூலார் அதனைச் செந்தொடை என்று கூறுவர்.

செம்மையாவது திரிபு படாததாகலின் மோனை முதலாய செயற்கைத் திரிபின்றி இயற்கையாக நின்ற செஞ் சொற்றொடை செந்தொடை எனப்பட்டது.

(எ-டு) "நெடுவேள் மார்பின் ஆரம் போல" எனவும்
"பூத்த வேங்கை வியன்சினை ஏறி எனவும் வரும். செய்யுள் முழுதும் செந்தொடையாயேவரின் அதனைச் செந்தொடைச் செய்யுள் என்ப.

கிளை எழுத்து முதலாக ஏதேனும் ஒரு சார்பு தோன்றி நிற்குமாயின் அதனை மருட்செந்தொடை என வழங்குவர் இடைக்கால யாப்பிலக்கண நூலார்.

சூ 101: மெய்பெறு மரபின் தொடை வகை தாமே
ஐயீராயிரத் தாறைஞ் ற்றெனூாடு

தொன்று தலையிட்ட பத்துக் குறை எழுநூற்
றொன்றும் என்ப உணர்ந்திசினோரே

கருத்து : மேற்கூறிய பதினேழ் நிலத்தும் விரிந்த அறுநூற்றிருபத்தைந்து அடிகளின்கண் மேற்கூறிய தொடைகள் மரபுவகையான் அமைந்து வருமாறும் அவற்றின் தொகையும் கூறுகின்றது.

உரை : எழுத்துக்களாலும் சொற்களாலும் உருப்பெறும் மரபினை உடைய தொடை வகைகள் தாம், பதின்மூவாயிரத்து எழுநூறு என்று கூறுவர் தொடையிலக்கணமுணர்ந்த புலவர்.

ஒரு பாவின்கண் அடிதோறும் வரும் தொடைகளையும் சீர்தோறும் வரும் தொடைகளையும் முன்னர்ப் பிரித்தோதினாராகலின் அம்முறையானே அவற்றின் தொகையினையும் உணர்த்தல் வேண்டி, ஐயீராயிரத்தென்றும், ஆறைஞ்ஞூற்றொடு தொன்றுதலையிட்ட பத்துக் குறை எழுநூற்றொன்று என்றும் கூறினார்.

ஆறைஞ்ஞூற்றொடு எழுநூறு - பத்துக்குறை தொன்று தலையிட்ட ஒன்றும் எனக் கூட்டிப் பொருள் கொள்.

எனவே அடிவகைத்தொடை பதினாயிரம் என்பதும் சீர் வகைத்தொடை மூவாயிரத்துஎழுநூறு என்பதும் பெறப்படும். தொன்று = ஒன்பது. தொன்றுதலையிட்ட என்றது ஒன்பது கூடிய என்றவாறு பத்துக்குறை என்றது பத்துக் குறைந்த என்றவாறு. எனவே ஒன்பது கூடிய பத்துக் குறைந்த எழுநூற்றொன்று என்றது எழுநூறு என்னும் தொகையினையாம். "ஆறைஞ்ஞூற்றொடு" என்னும் எண்ணின்கண் வந்த ஒடு எழுநூற்றொன்றும்" என்னும் எண்ணும்மையொடு இயைந்தது.

"ஐயீராயிரம்" என்றது போல மூவாயிரத்தெழுநூறு எனச் செவ்வனம் கூறாமல் இவ்வாறு கூட்டியும் குறைத்தும் ஓதியது என்னையெனின் ?

சூத்திரயாப்பு முறைமையுள் இவ்வாறமைப்பதும் ஒருநயம் என்பதைப் புலப்படுத்தற்கும் தொடை பற்றிய தொகையினை உய்த்துணர வைத்தற்குமாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U.S $ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U,S.$ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68—
   — கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெரும்படி களுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ	50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	62
சிவமும் செந்தமிழும்—பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ.	0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பீ. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம்.ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்நிலைய இதழ்,
அரண்மனை வளாகம்,
சிமெண்டீ, தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	~~25~~ 30	00	60	00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.